விலை ரூ. 2.00

ஈழ சுதந்திரன்

ELASUTANTIRAN

திருவள்ளுவராண்டு
உ0உஎ
ஆவணி-புரட்டாசி
செப்டம்பர் 1996
புத்தகம்: 9 இதழ்: 10

∴ சிறீலங்கா ராணுவம் நடத்துவது, புலிகளுடனான யுத்தமல்ல; தமிழினப் படுகொலை!

∴ இன்றைய யுத்தம் நீடித்தால் அனைத்துத் தமிழர்களும் இந்தியாவுக்கு அகதிகளாக வரும் அபாயம்!

# இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்காலம் கேள்விக்குறி

## இந்தியத் தலையீடு இன்றியமையாதது

இலங்கையில் தமிழர்களின் எதிர்காலமே இன்று கேள்விக்குறியாக எழுந்துள்ளது.

ஒரு காலத்தில் தீவின் தமிழ் பேசும் மக்களிலேயே தொகையில் முதன்மை இடத்தை வகித்த மலையகத் தமிழ்மக்களை (இந்திய வம்சாவளியினரை) மூன்றாமிடத்திற்குத் தள்ளி, அவர்களை வேரறுந்த சமுதாயமாக்கி, இலங்கையிலிருந்து விரட்டியடிப்பதில் சாதனைபடைத்த பண்டாரநாயகா குடும்பம், இன்றைக்கு வடக்குக் கிழக்குத் தமிழர்களையும் [ஈழத்தின் பூர்வீகக் குடிகளையும்] அவ்விதமே வேரறுந்த சமுதாயமாக்கி இலங்கையிலிருந்து விரட்டியடிக்கத் திட்டமிட்டுள்ளதோ என்பதையே தற்போது நடக்கும் யுத்தம் இனங்காட்டி வருகிறது.

### தமிழ்ப்பகைக் குடும்பம்

ஏனெனில், இன்றையக் குடியரசுத் தலைவராக இருப்பவர், 'சிங்களம் மட்டும்' சட்டத்தைக் கொண்டு வந்து தமிழ் ஒழிப்புக்கும், தமிழின ஒழிப்புக்கும் வழி வகுத்த S. R.D. பண்டாரநாயகாவின் மகள். 1972-ம் ஆண்டிலேயே மலையகத் தமிழ் மக்களின் வாழ்விடங்களைப் பறித்து, அவர்களை அனாதைகளாக்கித் தெருவுக்கு விரட்டிய அசல் பேரினவாதி திருமதி சந்திரிகா குமாரதுங்க. பிரதமராக இருப்பவர் அவருடைய அன்னை-1964ல் இந்திய-பாக்கிஸ்தான் யுத்த நெருக்கடியைப் பயன்படுத்திக்கொண்டு அன்றைய இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியுடன் ஒப்பந்தம் கண்டு, மலையகத் தமிழர்களில் கணிசமான பேரை-இலங்கையிலேயே பிறந்து வளர்ந்து, அதன் வளத்துக்காகவே உழைத்தவர்களை நாடுகடத்தியதிருமதி சிறிமா பண்டாரநாயக. யுத்த மந்திரியாக இருப்பவரோ, அவருடைய சகோதரர்-சந்திரிகாவின் தாய்மாமன் அனுருத்த ரத்வத்த. தன் மைத்துனர் சீவிலி ரத்வத்த மூலம் இந்த யுத்தத்திற்கு சீனாவிடமிருந்து ஆயுத தளவாடங்கள் கொள்முதல் செய்ததற்குக் கமிஷன் தொகையாக மட்டும் 400 மில்லியன் டாலர்களை கொள்ளையடித்தவர்.

### யு.என்.பி.யும் எஸ்.எல்.எப்.பி.யும்

முன்னைய ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி தமிழ் மக்களின் உரிமைகளை யாழ் குடா நாட்டோடு குறுக்குவதாக இருந்ததென்றால், இப்போதைய பண்டாரநாயக குடும்ப ஆட்சி அதையும் தமிழ் மக்களுக்கு விட்டுவைக்கக் கூடாது என்ற நோக்கில் தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதிலேயே குறியாக உள்ளது என்பதை யாழ்யுத்தம் மெய்ப்பித்து விட்டது.

விடுதலைப் புலிகளை விரட்டுகிறோம் என்ற பெயரில் ராணுவத்தின் மூலம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய அவர்கள், யாழிலிருந்து வெளியேறிய மக்கள் மீண்டும் அங்கு குடியேறலாம் என்று கூறினாலும், அரசினால் அங்கு குடியமர்த்தப்படுகிற மக்கள், தமிழரல்லாதவர்களாகவே இருப்பார்கள் என்பதை பின்வரும் நடவடிக்கை உறுதிப்படுத்தியுள்ளது. அதாவது யாழ்ப்பாணப் புனரமைப்புக்காக 10 ஆயிரம் பேர் திரட்டப்பட்டு, ஒவ்வொருவருக்கும் 3 ஆயிரம் ரூபாயும், 2 வார இராணுவப் பயிற்சியும் அளிக்கப்படும் என்று தொலைக்காட்சியில் அறிவித்த இளைஞர் விவகார அமைச்சர், அதற்கான ஆள் திரட்டல் வடக்குக் கிழக்குக்கு வெளியிலிருந்தே நடைபெறும் என்று கூறியிருப்பதாகும். புனரமைப்பு என்ற பெயரால் யாழ்ப்பாணத்திலும் சிங்களக் குடியேற்றம் செய்யப்படும் என்பதே இதன் பொருளாகும்.

[12-ம் பக்கம் பார்க்க]

### மீண்டும் வருகை இலங்கையிலிருந்து

## இந்தியாவுக்கு தமிழ் அகதிகள்

இலங்கையில் இருந்து தமிழர்கள் மீண்டும் இந்தியாவின் தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் செல்ல ஆரம்பித்திருப்பதாக வெளிநாட்டு நிவாரண உதவி அமைப்புக்களின் ஊழியர்கள் கொழும்பில் தெரிவித்தனர்.

'சில தமிழ்க்குடும்பங்கள்' இந்திய வள்ளங்களில் பாக்கு நீரிணையை கடந்து செல்வதை கண்டதாக' தெரிவித்த வெளிநாட்டு நிவாரண உதவி அமைப்பொன்றின் ஊழியர் ஒருவர் இந்த நிலைமை தொடருமேயானால் பிரச்சினை பாரதூரமானதாகப் போகலாம் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கையின் வடமேற்கு பகுதியான மன்னாரில் பேசாலையில் இருந்து 21 தமிழ் அகதிகள் படகுகள் மூலமாக தமிழ் நாட்டின் இராமேஸ்வரம் கரையோர நகரை கடந்த வியாழக் கிழமை வந்தடைந்ததாக தமிழ் நாடு மாநில பொலீஸ் இயக்குநர் நாயகம் கே.கே. ராஜசேகரன் நாயர் தெரிவித்தார்.

முன்னதாக கடந்த புதன் கிழமை 6 இலங்கைத் தமிழ் அகதிகள் கண்ணாடி இழைப் படகுள் மூலமாக இராமேஸ்வரத்தை வந்தடைந்ததாக அகதிகள் நிவாரணப் பணியாளரான எஸ். சி. சந்திரகாசன் கூறியதாக ராய்ட்டர் செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

வியாழக்கிழமை இராமேஸ்வரம் வந்தடைந்த 21 தமிழ் அகதிகளும் இலங்கைப் பட கொன்றையே பயன்படுத்தியிருக்கிறார்கள் இந்திய மீனவர்களின் படகுகள் இதற்கு வழித்துணை வழங்கியிருக்கக்கூடும் என்றும் சந்திரகாசன் தெரிவித்தார். விடுதலை புலிகளே இந்த அகதிகளை படகுகளில் ஏற்றி தமிழகத்துக்கு அனுப்பியதாக உள்ளூர் தமிழ்ப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

இலங்கை அரசாங்கப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையேயான தீவிர சண்டைகளில் இருந்து தப்புவதற்காகவே இவ்வாறு மன்னாரில் இருந்து தமிழர்கள் இந்தியாவுக்கு ஓட முயற்சிக்கிறார்கள். உணவுத் தட்டுப்பாட்டுக்கும் இதற்கும் எதுவித தொடர்பும் இல்லை, படுமோசமான சூழ்நிலையில் இருந்து எவ்வாறாவது தப்பிச் சென்று விட வேண்டுமென்ற விரக்தியின் விளிம்பிலான பிரயத்தனமே இது' என்று இன்னொரு நிவாரண ஊழியர் தெரிவித்தார்.

### விரக்தியின் விளிம்பில்...

இலங்கையில் இருந்து முன்னர் சென்ற தமிழ் அகதிகளில் இன்னமும் 53 ஆயிரம் பேர் தமிழ் நாட்டில் உள்ள முகாம்களில் வைக்கப் பட்டிருக்கிறார்கள். சுமார் 63 ஆயிரம் பேர் ஏற்கனவே இலங்கைக்குத் திருப்பியனுப்பட்டு விட்டனர். எஞ்சியோர் முகாம்களுக்கு வெளியே வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகத்தின் சார்பில் சென்னையில் நடந்த நலப்பணியாளர் பயிற்சிக் களத்தை முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணாவின் வளர்ப்புமகன் டாக்டர் C.N.A. பரிமளம் குத்து விளக்கேற்றித் தொடங்கி வைத்தபோது எடுத்தபடம்.

ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்

www.padippakam.com

''தானத்தின் மிக்க தருமமும், தக்கார்க்கு
ஞானத்தின் மிக்க உசாத்துணையும்-மானம்
அழியா ஒழுக்கத்தின் மிக்கதூஉம் இல்லை
பழியாமல் வாழும் திறம்''

-அறநெறிச்சாரம்

(தகுதியுடையவர்களைத் தேடிச்சென்று அவர்களுக்கு வேண்டியவற்றை வேண்டியவாறு உதவுதலைக் காட்டிலும் சிறந்த அறம் இல்லை. தகுதியுடையார்க்கு அறிவைக் காட்டிலும் சிறந்த உறுதுணையில்லை. தன்மானம் இழக்காத ஒழுக்கத்தைக் காட்டிலும் சிறந்த பெருமையில்லை. பிறர் பழிக்காமல் வாழும் திறமையே திறமையாகும்.)

# தெளிவு

## புதிய அகதிகள் வருகையும் இந்திய-தமிழகப் பொறுப்பும்

இலங்கை அரசின் முப்படைத் தாக்குதல்களின் காரணமாக ஈழத் தமிழ் மக்கள் மீண்டும் இந்தியாவுக்கு அகதிகளாகத் திரண்டு வருகின்ற அபாயநிலை வளர்ந்து வருகின்றது. 1983இல் நடந்த வரலாறு காணாத தமிழினப் படுகொலை காரணமாக தமிழ் மக்கள் இந்தியாவுக்கு அகதிகளாக வரத் தொடங்கியதும், 1990 இல் இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் இருந்து திரும்பிய கையோடு இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாக இங்கு ஓடிவந்ததும் சிறீலங்கா இராணுவத்தின் கண்மூடித்தனமான தாக்குதலின் விளைவே என்பதை நானிலமே அறியும்.

இனச்சிக்கலுக்கு சமாதான வழியில் தீர்வு காணும் வாய்ப்புகள் எத்தனையோ முறை- ஏற்பட்டும் அந்த வழியில் இந்தியா தலையிட்டு, ஒரு ஒப்பந்தம் போடப்பட்டு முன்னேற்றம் கண்ட நிலையிலும், இராணுவ ரீதியில் தீர்வு காண்பதிலேயே சிறீலங்கா அரசு அக்கறை காட்டி வருவதால் அவை அனைத்துமே குலைந்து போயின.

### 1987ன் இந்திய-இலங்கை உடன்பாடு

தற்போதைய சிறீலங்கா குடியரசுத் தலைவர் திருமதி. சந்திரிகா குமாரதுங்க, முன்பிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை காரணமாகவே இலங்கை இனப்பிரச்சினை தீராமல் இருந்ததென்றும், தாம் தமிழர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு சமாதான வழியில் தீர்க்கப் போவதாகவும் சொல்லியே ஆட்சிக்கு வந்தார். இருப்பினும் இலங்கைத் தமிழ் மக்களுடைய பிரச்சினையின் செயற்பாட்டில், அதனை புலிகளின் பிரச்சினையாகக் குறுக்கி, அவர்களை அழிப்பதன் மூலம் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து விடுவேன் என்கிற பாணியில்-இராணுவ ரீதியில் தமிழ் மக்களின் அழிவுக்கு வழி வகுப்பதிலேயே அவர் முனைப்பாக இருக்கிறார்.

1987 இல் ஏற்பட்ட இந்திய-இலங்கை உடன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மேலும் முன்னேற்றம் காண்பதாய் பேச்சுவார்த்தை நடத்துதாக இருந்தால் உள்ளபடியே ஒரு தீர்வு ஏற்பட வழி பிறந்திருக்கும். ஆனால் விடுதலைப் புலிகளை மையமாக வைத்து திருமதி. சந்திரிகா இப்பிரச்சினையை அணுகியதால் அவர்களை ஒழிப்பது ஒன்றே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று கொண்டு, தமிழ் மக்கள் மீது இராணுவத் தாக்குதல்களை முடுக்கிவிட்டு இருக்கிறார்.

### சொல்லொணாத் தமிழர் துயர்

யாழ் தீபகற்பத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றி இருந்தாலும் தமிழ் மக்களுக்கான புனரமைப்பு வேலைகள் போதிய அளவுக்கு நடைமுறைப்படுத்தப்படவில்லை; இதனால் ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்த அளவில் சிங்கள இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சிக்கித் திரிசங்கு சொர்க்க நிலையில் அவர்கள் திண்டாடிக்கொண்டுள்ளனர்.

போர் தொடர்ந்தும் நடந்து கொண்டு இருப்பதால் அன்றாட வாழ்க்கை தமிழ் மக்களைப் பொறுத்த அளவில் அஸ்தமனம் ஆகி விட்டது. உணவுப்பொருள் முதற்கொண்டு அனைத்து அத்தியாவசியப் பொருட்களுக்குமான தடை தமிழீழப் பகுதிகளிலில் தொடர்ந்து நீடிக்கிறது. வானில் இருந்தும், கடல் வழியிலும், தரை வழியாகவும் தொடர்ந்தும் குண்டு மாரி பொழிந்து வருவதால் எந்தத் தொழிலிலும் ஈடுபட முடியாத தமிழ் மக்கள், சொந்த நாட்டிலேயே அகதிகளாக மாறிப் பெரும்பான்மையினர் அகதி முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர் ஆனால், அந்த முகாம்கள் சரியாகப் பராமரிக்கப்படாததாலும், தொண்டு நிறுவனங்கள் சேவையாற்றஅனுமதிக்கப்படாமையாலும், சிங்கள இராணுவத்தின் திடீர்த் தாக்குதல்களாலும் தமிழ் மக்கள் படும் துயரம் சொல்ல முடியாததாக உள்ளது.

### இந்தியாவுக்கு விரட்டியடிக்கும் நெருக்கடிகள்

இந்த நிலையில் தற்போது விடுதலைப்புலிகளின் ஆதிக்கத்தில் உள்ள கிளிநொச்சியைக் கைப்பற்றுவது என்ற போக்கில் சிறீலங்கா இராணுவம் கடுமையான தாக்குதல்களைத் தொடுத்து இருப்பதால், தமிழ் மக்கள் தெற்கில் சிங்களப் பகுதிக்குப் போவதற்கு அஞ்சுவதாலும், வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்குச் செல்லத் தயங்குவதாலும் - இரண்டுபுறமும் ஒருபுறம் சிங்கள ராணுவமும், மறுபுறம் விடுதலைப்புலிகளும் கடுமையான மோதலில் ஈடுபட்டு இருப்பதாலும், உயிர்தப்புவதற்காக மீண்டும் இந்தியாவுக்கே அகதிகளாக ஓடிவரக் கூடிய நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். அதன் எதிரொலிதான் எத்தனையோ அபாயங்களையும் மீறி அண்மையில் இராமேசுவரத்திற்கும், நாகபட்டினத்திற்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் படகுகளில் உயிரைப் பணயம் வைத்து இந்தியாவிற்கு வந்தது. இன்னும் -வந்து கொண்டு இருப்பது ஆகும்.

இன்று இலங்கைத் தமிழ்ப்பகுதியில் உள்ள மோதல் சூழ்நிலை இப்படியே நீடிக்குமாயின் அத்தனை தமிழ் மக்களும் ஒட்டு மொத்தமாக இந்தியாவுக்கே அகதிகளாக வரக் கூடிய நிர்ப்பந்தத்தைத் தவிர்க்க முடியாது. இரண்டு எல்லைகளிலும் பாதுகாப்புக் கெடுபிடிகள் இல்லையென்றால் இதற்குள் அந்தமக்கள் இலட்சக்கணக்கில் இந்தியாவுக்குள் ஓடி வந்து இருப்பார்கள். எத்தனையோ கெடுபிடிகள் இருந்தாலும் அங்கு நிலை இப்படியே நீடிக்குமானால் நிச்சயம் அவர்கள் அபாயத்தைப் பொருட்படுத்தாமல் இந்தியாவிற்குப் புகலிடம் தேடி ஓடிவருவதைத் தவிர்க்க முடியாது.

### தீர்வுக்கு வர சிறீலங்காவை நெருக்குக

எனவே, இந்தியாவில் உள்ள அரசும் அரசியல் கட்சிகளும் இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரை புலிகளையும் தமிழ்ப் பொது மக்களையும் ஒன்றாக வைத்துப் பார்க்காமல், மனிதாபிமானத்தோடு நோக்கி, இலங்கையில் அமைதி திரும்புவதற்கும், தமிழ்மக்களின் உயிர், உடைமைகளுக்கு உத்தரவாதம் பெற்றுக் கொடுப்பதற்கும் ஒருமித்த கருத்துக்கு வந்து, சமாதானத் தீர்வுக்கு வழிகாண வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

குறைந்தபட்சம் ஈழத்தில் பொது மக்களுக்கு எதிரான போரைநிறுத்தவும், தமிழ்ப்பகுதியில் உணவுத் தடைகளை நீக்கவும், தொண்டு நிறுவனங்கள் தமிழ் மக்களிடையே சேவையாற்ற அனுமதிக்கவும் சிறீலங்கா அரசாங்கத்தை இந்தியா வலியுறுத்தி ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

## கிளிநொச்சித் தாக்குதல்கள்: 2 லட்சம் பேர் இடம் பெயர்ந்தனர்

கிளிநொச்சியைச் சுற்றியுள்ள பகுதிகளின் மீது நடத்தப்பட்டஷெல்லடித்தாக்குதல் கடந்த இரண்டு நாட்களாகக் குறைந்துள்ளது என்று பெரும்பாலும் புலிகளின் வசமிருக்கும் வடகிழக்குக்குச் சென்று சற்று முன் திரும்பிய நிவாரணப் பணியாளர்கள் கூறுகின்றார்கள். இருப்பினும் அண்மை ராணுவ நடவடிக்கையின் போது, வான்வெளி மற்றும் ஷெல் தாக்குதல்களில் பொது மக்களில் 20 முதல் 30 பேர் வரை கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும், நூற்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் காயமுற்றார்கள் என்றும் நிவாரணப் பணியாளர்கள் கூறுகின்றார்கள்.

போரின் காரணமாகச் சுமார் 2 லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து உள்ளார்கள் என்று அவர்கள் மதிப்பிட்டுள்ளார்கள். இவர்களில் முக்கால் வாசிப்பேர் புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட முந்தைய ராணுவத் தாக்குதலின் போது இடம்பெயர்ந்தவர்கள் ஆவார்கள். தாம் எதிர்பார்த்ததை விட அதிகமாகப் புலிகளின் எதிர்ப்பைச் சந்தித்த காரணத்தினால் கிளிநொச்சியை நோக்கிப் படைகள் முன்னேறிச் செல்வதை அரசு தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதையே, போரில் காணப்படும் ஓய்வு காட்டுவதாக ராணுவக் கண்ணோட்டக்காரர்கள் கூறுகிறார்கள்.

கிளிநொச்சியைக் கைப்பற்றுவதுதான் இப்போதைய நோக்கம் என்பதை ராணுவ அதிகாரிகள் உறுதிப்படுத்த எப்போதுமே மறுத்து வந்துள்ளார்கள். புலிகளால் பலமாகப் பாதுகாக்கப்பட்டு வரும் பிரதேசத்துக்குள் ராணுவத்தின் முன்னேற்றம் தொடங்கியது முதலே மெதுவாகத்தான் இருக்கிறது என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டு உள்ளார்கள். இதற்கிடையில் புலிகளின் வசமுள்ள பகுதிகளில் விநியோகம் செய்வதற்காக அரசு கட்டுப்பாட்டில் உள்ள ஊரான வவுனியாவிலிருந்து உணவு வாகனங்கள் புறப்பட்டுச் செல்லும் விசயத்தில் இப்போது உடன்பாடு எய்தப் பட்டுள்ளது என்று வடபுல வட்டாரங்கள் கூறுகின்றன. மூன்று வாரங்களுக்கு மேலாக 120 லாரி வாகனங்கள் வவுனியாவில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. மேற்கொண்டு 40 லாரிகள் புலிகள் வசமுள்ள பகுதிகளில் கடந்த ஒருவார காலமாக காத்துக் கொண்டு இருக்கின்றன.

(11-8-96 அன்று பி.பி.சி. ஒலிபரப்பிய செய்தி)

### தமிழக முதல்வர் கலைஞருக்கு

## தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் மனம் நிறைந்த பாராட்டு

இலங்கைத் தமிழ் அகதி மாணவர்களுக்கு தமிழகக் கல்லூரிகளில் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி உட்பட எல்லாத் துறைகளிலும் உயர் கல்வி பெற்றிட மீண்டும் தனி ஒதுக்கீடுகளை வழங்க ஆணை பிறப்பித்த ''தமிழக முதல்வர் கலைஞர்'' அவர்களை தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட கிளையின் சார்பில் நன்றியினையும், பாராட்டுதலையும் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழ் அகதி மாணவர்களுக்கு கல்லூரிகளில் உயர் கல்வியினை பெற்றிட ஆணை பிறப்பித்து மீண்டும் ஒரு மறுமலர்ச்சி ஈழத்தமிழர்களுக்கு உருவாக்கிய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும், இதற்காக ஈழத்தமிழ்ச் சமுதாயத்திற்கே உயிர் கொடுக்கவும் விடா முயற்சியில் இடஒதுக்கீடு ஈழ மாணவர்களுக்கு பெற்றுத் தந்த ஈழஏதிலியர் மறுவாழ்வுக்கழக நிறுவனர் சா.செ. சந்திரகாசன் அவர்களுக்கும் தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் மனமார்ந்த பாராட்டுதலையும், நன்றியினையும் தெரிவிக்கிறது. மேலும் தமிழக முதல்வர் அவர்கள் ஈழத்தமிழ் மாணவர்கள் எல்லா துறையிலும் வேலை வாய்ப்பு பெற்றிடவும் உதவிட வேண்டுகின்றோம்.

இவ்வாறு தனது அறிக்கையில் தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்க மாவட்ட செயலாளர் கோ.ப. சின்னப்பா கூறியுள்ளார்.

## ரஷ்ய வெளிவிவகார அமைச்சு கண்டனம்

இலங்கையில் சமீபத்தில் தமிழ்ப் பிரிவினைவாதிகள்மீது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த தகவல் கவலை அளிப்பதாக உள்ளதாக ரஷ்ய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அல்டு கையில் தெரிவிக்கப்பட்டிக்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

நாட்டின் வடக்கு கிழக்கில் தீவிரவாதக் குழுவான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் அரசுப்படைகளுக்கும் இடையில் நிகழ்ந்த மோதல்களினால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



## செய்திச் சரம்

21-7-96

முல்லைத்தீவு இராணுவ முகாம் புலிகளால் தாக்கப்பட்டதை அடுத்து அதிபர் சந்திரிகா தனது லண்டன் பயணத்தைப் பாதியிலேயே முடித்துக் கொண்டு அவசரமாக நாடு திரும்புகிறார்.

(தினமணி, தினகரன், தினமலர், கதிரவன்)

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது தாங்கள் நடத்திய வெற்றிகரமான தாக்குதல், சமாதான முயற்சிகளுக்கான அடித்தளம் என்று பாரிசிலிருந்து புலிகளின் செய்தித் தொடர்பாளர் லாரன்ஸ்திலகர் பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு கூறியுள்ளார்.

(தினமணி)

முல்லைத்தீவு இராணுவ முகாமை இழந்ததால் ஆத்திரம் அடைந்த இராணுவத்தினர் கிளிநொச்சி நகரில் குண்டுகளால் தாக்கியதில் 5 பேர் கொல்லப்பட்டனர். 16 பேர் காயமடைந்தனர் என்று புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

(தினகரன்)

முல்லைத்தீவு பகுதி முழுவதும் தங்களது கட்டுப்பாட்டில் வந்து விட்டதாகவும், அங்கு நடந்த சண்டையில் இராணுவத்தினர் 800 பேர் கொல்லப்பட்டனர் என்றும் அவர்களது உடல்களை அரசிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாகவும் நேற்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

(தினமலர், கதிரவன், இந்து)

முல்லைத்தீவை நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ ஹெலிகப்டர் ஒன்றை புலிகள் சுட்டு வீழ்த்தினர் என்று திருகோணமலை போலிஸார் தெரிவித்துள்ளனர்.

(கதிரவன்)

கொழும்பு விமான நிலையத்தில் இந்தியப் பத்திரிகைகளை இலங்கை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து விநியோகிக்க முடியாமல் தடுத்துள்ளனர் என்று இந்திய பத்திரிகை ஏஜென்ட் தெரிவித்துள்ளார். பறிமுதல் செய்யப்பட்ட பத்திரிகைகள் இந்து, தினமணி, தினகரன், கதிரவன், தினமலர் போன்றவை.

(தினமணி, தினகரன், இந்து)

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது நடந்த தாக்குதலில் 1000 க்கும் அதிகமான இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக புலிகள் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

(தினமலர், தினகரன்)

முல்லைத்தீவு போரில் கொல்லப்பட்ட 441 இராணுவத்தினரின் உடல்களை கிளிநொச்சியில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் புலிகள் ஒப்படைத்தனர்.

(தினகரன், தினமலர், கதிரவன்)

# போராலும் பெரும்பான்மை இன்மையாலும் ஊசலாடும் அதிகாரப் பகிர்வுத் திட்டம்

### பி.பி.சி. படப்பிடிப்பு

இலங்கையில் 13 ஆண்டு காலமாக நடந்து வரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்குடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் அதிகாரப் பகிர்வு திட்டம் ஒன்றை வெளியிட்டு இன்றுடன் சரியாக ஓராண்டு நிறைவு பெறுகிறது. இருப்பினும் இத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் தீர்மானமாக நிவைவேற்றும் விசயத்தில் இதுவரை முன்னேற்றம் எதுவும் இல்லை. கடும்போர் தொடர்ந்து வருகிறது.

**ஆகாத அனைத்துக் கட்சிப் பேச்சு**

அதிகார பகிர்வுத் திட்டத்துக்கான ஆதரவு திரட்டுவதற்கு இலங்கை அரசு கடந்த 12 மாதங்களாகத் திண்டாடி வருகிறது. எநாளும் அரசியல் வழி மூலம் காணப்படும் சமாதானத் தீர்வை இன்னமும் அது கைவிடவில்லை. இலங்கை அரசாங்கம் வைத்து இருக்கும் திட்டத்தின்படி சிறுபான்மைத் தமிழருக்கு கூடிய தன்னாட்சி கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதில் பரிந்துரை செய்யப்பட்ட பிராந்தியக் கட்சிகள் மூலம் வடக்கிலும், கிழக்கிலும் அதிகமாக வாழும் தமிழ் மக்களுக்கு அந்தப் பிராந்திய அதிகாரங்களை முழுவையாக நிர்வகிக்க மத்திய அரசிடம் இருந்து அனுமதி கிடைக்கும். ஆனால் பழமை வாய்ந்த சிங்கள் அரசுத் தலைவர்கள் இந்தத் திட்டத்தை கண்டிக்கிறார்கள். இது விடுதலைப் புலிகள் பல ஆண்டுகளாகக் கேட்டு வந்ததைப் போல நாட்டை இன அடிப்படையில் கூறு போடத் துணைபோகும் வேலையென அவர்கள் கூறுகிறார்கள். இனவாதத் தமிழ்க் கட்சிகள் இந்தத் திட்டத்துக்கு ஆதரவாக இல்லை. அதிருப்தியாக உள்ளனர்.

தற்போது இருக்கின்ற திட்டம் உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கிடப் போதாது என்பது அவர்களின் வாதம். சென்ற மார்ச் மாதம் தொடக்கம் அனைத்து கட்சிப் பிரிவுக் குழுவொன்று அத்திட்டத்தின் படி கூடிக் கலந்து பேசிக் கொண்டு இருக்கிறது. ஆனால் செய்தியாளர் மகாநாட்டிலே அந்தச்செய்திப் பிரிவு கூறுகின்ற செய்தி என்னவெனில் முன்னேற்றம் எதுவும் பொதுவாக ஏற்படவில்லை என்பதேயாகும்.

**பாராளுமன்றில் பலமின்மை**

அரசின் இத்திட்டம் கனியாவதற்கு முக்கிய தடைக்கற்களாக இருப்பது அரசின் நலிந்த பெரும்பான்மையாகும். இந்த அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை அரசியல் அமைப்பில் சேர்க்க வேண்டும் என்றால் அரசுக்கு சிறுபான்மை தமிழ் முஸ்லீம் கட்சிகளிலிருந்து குறைந்தது யு.என்.பி. - கட்சியிலிருந்து 12 வாக்குகளாவது கிடைக்க வேண்டும்.

**யு.என் பி. பிடிவாதம்**

இதற்கு ஆதரவு கிடைப்பதாகத் தெரியவில்லை. அரசியல் சாசனத்தின்கீழ் இலங்கை ஒருமித்த பகுதியாக இருக்க வேண்டும். அதை பிராந்திய வாரியாகப் பிரித்து ஐக்கிய இலங்கை என்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறது, யு.என்.பி. கட்சி. ஆனால் இலங்கையை பிராந்தியங்களாகபிரித்து,அவைஒவ்வொன்றுக்கும் தன்னாட்சி அதிகாரம் வழங்குவதான வழக்கப்படி சிறுபான்மை இனங்களைத் திருப்திப்படுத்தமுடியாது. அரசியல் சாசனத்திற்குப் பொறுப்பான எல். பீரிஸ் அவர்கள் வடக்கே விடுதலைப் புலிகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கை தொடர்ந்து வரும் வேளையில் இலங்கை அரசு தனது அதிகாரப் பகிர்வுத் திட்டத்தில் இன்னமும் விசுவாசமாக, உறுதியாக இருந்து வருகிறது என்று மீண்டும் கூறி இருக்கிறார்.

அத்துடன் இந்த அதிகாரப் பகிர்வுத் திட்டம் அங்கீகாரம் பெற எவ்வளவு தாமதம் ஆகிகிறதோ, அவ்வளவுக்கு போர் தொடரும். அது பொருளாதாரத்தில் தாங்க முடியாத அளவுக்கு இருக்கும் என்று பீரிஸ் கூறினார். நாட்டின் பாதுகாப்புச் செலவுக்கு நிதி வழங்குவதற்காக மக்கள் பல தியாகங்களைச் செய்ய வேண்டி ஏற்படும் என்று அதிபர் சந்திரிகா குமாரதுங்க ஏற்கனவே கூறி இருக்கிறார். சென்ற மாதம் உணவுப் பொருட்களைக் குறைக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார். அதைவிட வேறு பல கஷ்டங்களை மக்கள் சுமக்க வேண்டும் என்றும் அவர் எச்சரித்து இருந்தார்.

இவ்வாறு; தனது 3-8.96 செய்தி விமர்சனத்தில் பி.பி.சி. கூறியுள்ளது.

# அடைமழைக்கு முன்பு திருத்தப்படவேண்டிய அகதிக் குடியிருப்புக்களின் ஆபத்தான நிலை பற்றிய கோரிக்கை

### தமிழக முதல்வர் கலைஞருக்கு சந்திரகாசன் மடல்

எமது ஈழத் தமிழ் மக்கள் அகதிகளாகஅல்லற்பட்டுஆற்றாது அழுது கண்ணீர் வடித்தபடி தாய்த் தமிழகத்தில் தஞ்சமடைந்த 1990ல் தாய் மனதுடைய தாங்கள் அப்போதைய தமிழக முதலமைச்சராக இருந்த காரணத்தால், தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் முகாம்களை அமைத்து அந்த மக்களை உடனடியாகக் குடியமர்த்தினீர்கள். அந்த நன்றியை எங்களால் மறக்க முடியாது. இருப்பினும் அப்போது தற்காலிக அடிப்படையிலேயே பெரும்பாலான அகதி முகாம்களின் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டன. ஓரிரு ஆண்டுகளில் சிக்கல் தீர்ந்து ஈழத் தமிழ் மக்கள் தாயகம் திரும்பி விடுவார்கள் என எதிர்பார்த்தே அப்படிச் செய்யப்பட்டது என்பதை நாங்கள் உணர்கிறோம். ஆனால் இன்று வரை அந்தச் சிக்கலுக்கு எந்தத் தீர்வும் காணப்படாதுடன், இன்றைக்கும் உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் இல்லாத நிலையில் ஈழத்தில் போர் நடப்பதும் ஈழத்தமிழ் மக்கள் கொன்று குவிக்கம்படுவதும் தாங்கள் அறியாததல்ல.

**தார் அட்டைகள்**

அதனால் இங்கு அகதிகளாகத் தஞ்சம் புகுந்த எமது மக்கள் தாயகத்தில் முழு அமைதி ஏற்பட்டுத் திரும்பும் வரை தொடர்ந்தும் இங்குள்ள முகாம்களிலேயே வாழ வேண்டியிருப்பது காலத்தின் கட்டாயமாக உள்ளது. அதே வேளை பெரும்பாலான முகாம்களில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட குடியிருப்புக்கள் அனைத்துமே சிதைவடைந்து அகதி மக்கள் வெயிலிலும், மழையிலும் தவிக்க வேண்டிய பரிதாப நிலையில் உள்ளனர். குறிப்பாக கூரைக்குப் பயன்படுத்தப்பட்ட தார் அட்டைகள் பாழடைந்து காற்றினால் பிய்த்தெறியப்பட்டு சிதைத்த நிலையில் உள்ளன. எனவே வருகின்ற அடைமழை காலத்துக்கு முன்னால் அந்தக் குடியிருப்புகளைத் திருத்தி அமைக்க உத்தரவிட்டு அகதி மக்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டுகிறோம்.

**தில்லியின் ரூ. 4 கோடி**

எமது வேண்டுகோளினை ஆய்ந்தபின் நடுவண் அரசின் உள்துறை இவ்வாண்டு மார்ச் மாதத்தில் ரூபாய் 4 கோடியை அகதி முகாம் திருத்தங்களுக்காக ஒதுக்கியது. ஆனால் தேர்தலை முன்னிட்டு அப்பணம் தமிழக அரசை வந்தடையவில்லை என்று கூறப்படுகிறது. அதனால் அந்த நிதியை உடனடியாகப் பெற்றோ அல்லது பின்னால் பெற்றுக் கொள்ள வழி செய்து, மாநில அரசின் பொறுப்பிலோ அந்தக் குடியிருப்புக்களை உடனடியாகத் திருத்திக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு, ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகப் பொருளாளர் சா.செ. சந்திரகாசன், தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு 31-7-96 அன்று எழுதியுள்ள மடலில் கோரியுள்ளார்.


### "ஈழசுதந்திரன்" மாத இதழ் சந்தா விபரம்

ஓராண்டு சந்தா இந்தியாவில் ரூ. 30-00

வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10

அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழ சுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தாசேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளலாம் :

நிர்வாகி<br>
"ஈழசுதந்திரன்"<br>
14, சேட் காலனி முதல் தெரு<br>
மூன்றாம் மாடி,<br>
எழும்பூர், சென்னை-600 008.

www.padippakam.com



# கழகத்திலிருந்து உயர் கல்வி உதவி பெறும் மற்றும் பெற உத்தேசிக்கும் மாணவர்களுக்கு...

தமிழ் நாட்டில் தங்கிப் படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு உயர் கல்வி மறுக்கப்பட்டிருந்ததை அனைவரும் அறிவீர்கள். இப்போது இத்தடை நீக்கப் பட்டுள்ளது. இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி கல்லூரி களில் சேர்ந்து முழு முயற்சியுடன் படித்து சிறந்த மாண வர்களாக நீங்கள் திகழ வேண்டும்.

உயர் கல்வி கற்பதற்கு மிகுந்த செலவு ஏற்படும் கார ணத்தைக் கொண்டு கழகம் கல்லூரிகளில், அரச பாலி டெக்னித் மற்றும் அரசதொழில் நுட்பக்கூடங்கள் (ஐ.டி.ஐ) ஆகிய உயர் கல்வி நிறுவனங்களில் கற்கும் மாணவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகைக்கு உட்பட கழகம் உதவி வழங்கு கின்றது.

இவ்வுதவி வழங்குவதற்கு கழகம் சில பொது விதி முறைகளை அமைத்துள்ளது. இவ்விதிமுறைகளுக்கு அமையவே உதவி வழங்கப்படும்.

1) உயர் கல்வி உதவிபெறும் மாணவர்கள் அனைவ ரும் தம் ஈழ அகதி மக்களிடையே சேவையாற்ற வேண்டும். சேவையாற்றாதோருக்கு உதவிவழங்க முடியாது.

2) உயர் கல்வி உதவிக்குப் புதிதாக விண்ணப்பிப் போர் முறைப்படி கழகச் செயலருக்கு உயர் கல்வி உதவி விபரப் படிவங்களைப் பூர்த்தி செய்து விண் ணப்பிக்க வேண்டும். இப்படிவங்கள் மண்டல அலுவலகங்களில் கிடைக்கும்.

3) புதிதாக மனுச்செய்வோர் நேர்காணலொன்றிற்கு அழைக்கப்படுவரர்கள். அதன் பின்பு அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

குறிப்பு : கல்லூரியில் சேர்வதற்கு அவசரமாக உதவி தேவைப்படும் நிலையில் மண்டலப்பொறுப்பாளர்கள் இவ் வுதவியினைக் குறித்து நிலைமையை ஆராய்ந்து கொடுத்து உதவிடலாம். பின் எமக்குப் பற்றுச்சீட்டுக்களுடன் உடன் அறிவிக்க வேண்டும்.

4) உதவி பெறும் மாணவர்களும் புதித்ாக உதவுக்கு விண்ணப்பிப்போரும் சில பொது விதிகளுக்கமைய விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

அ) பற்றுச்சீட்டுக்களின் பிரதிகள் கோரிக்கை மனுக் களுடன் இணைக்கப்பட வேண்டும்.

ஆ) மனுவில் மாவட்டத் தொண்டர் பரிந்துரையைப் பெற்றிருக்க வேண்டும்.

இ) எல்லா மனுக்களும் மண்டல அலுவலகம் மூலம் மண்டலப் பொறுப்பாளர் பரிந்துரையுடன் அனுப் படல் வேண்டும். தேவைப்பட்டால் இம்மனுவின் பிரதியினை மாணவர் நேரடியாகத் தலைமை அலு வலகத்திற்கு அனுப்பலாம். முறையான மனு சமர்ப் பிக்கப்பட்டுள்ளதை இப்பிரதியில் குறிக்க வேண் டும்.

ஈ) முறைப்படி அனுப்பப்படாத மனுக்கள் மீண்டும் மாணவர்களுக்கே திருப்பி அனுப்பப்படும்.

உ) உதவிக் கோரிக்கை மனுவுடன் சேவை விபரங்கள் இணைக்கப்பட வேண்டும்.

5) புதிதாக உதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஓர் நேர் காணலுக்கு அழைக்கப்பட்டதற்குப் பின்பு உதவி வழங்குவது தொடர்பான முடிவு எடுக்கப்படும்.

6) உதவிகள் மாவட்ட சமூக சேவையாளர் மூலம் முகாமில் நேரில் வழங்கப்படும்.

7) தொடர்ந்து உதவி பெறும் மாணவர்கள் புதிய கல்வியாண்டு அதாவது (1996-97)-ற்கு உதவு மாறு மேற்குறிப்பிட்ட முறையில் உடனடியாக மனுச் செய்ய வேண்டும்.

கழகத்தில் உயர் கல்விக்காக தனி நிதி ஏதும் இல்லாத போதிலும் பல்வேறு இடங்களில் இருந்துபலத்த சிரமத்திற்கு மத்தியில் நிதி திரட்டியே அகதி மாணவர்களுக்கு உயர் கல்வி உதவி அளிக்கப்படுகின்றது. முன்னர் கழகத்தில் உதவி பெற்ற மாணவர்கள் தம் சமூகத்திற்கு எந்தவித பொதுச்சேவையையும் செய்யாமையைக் கருத்திற்கொண்ட உதவி வழங்கும் அமைப்புகள் உயர் கல்விக்குஉதவிஅளிக்க மறுத்து விட்டன. இத்துர்ப்பாக்கிய நிலை தொடராதிருக்க வேண்டுமானால், தற்போது கழகத்தில் இருந்து கல்வி உதவி பெறும் மாணவர்கள், அடுத்த ஆண்டு புதிதாகக் கல்லூரிகளில் சேர்ந்து உதவி பெற இருப்பவர்களுக்கு தத்தம் விடுமுறை நாட்களில் ஈழ அகதிகளுக்கான சமூக சேவையில் கட்டாயம் ஈடுபட வேண்டும். சேவையில் காட்டும் ஈடுபாடு மற்றும் மாணவர்களின் குடும்ப நிலை போன்றவற்றைக் கருத்திற்கொண்டு அடுத்த கல்வி ஆண் டிற்கான உயர் கல்வி உதவிகள் வழங்கிடப்படும்.

இப்படிக்கு,
***உயர் கல்விக்கான சிறப்புக்குழு,***
***ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்***
14, சேட்காலனி முதல் தெரு,
எழும்பூர், சென்னை-600 008.

# மன்னாரில் இருந்து யாழ். செல்ல அரச ஊழியருக்கு அனுமதி மறுப்பு

## *காங்கேசன்துறையுடன் திருப்பி அனுப்பப்பட்டனர்*

மன்னாரில் இருந்து கப்ப லில் யாழ்ப்பாணம் செல் வதற்கு பதிவு செய்தவர்களில் 34 அரச ஊழியர் காங்கேசன் துறைக்கு கூட்டிச் செல்லப் பட்டு பின்னர் மீண்டும் மன் னாருக்கே கூட்டி வரப்பட் டுள்ளனர்.

கொழும்பில் இருந்து மன் னாருக்கு உணவுப்பொருள் களை ஏற்றிவந்த 'ஓஸன்கரி யர்' என்ற கப்பலில் இருந்து உணவுப்பொருள்கள் இறக்கப் பட்டதும் அக்கப்பல் மீண்டும் கொழும்புக்கு திரும்பி செல்லும் போது மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பயணி களை எற்றிச் சென்று காங் கேசன் துறையில் இறக்கு வதற்கு ஒழுங்குசெய்யப்பட்டி ருந்தது.

### *காத்திருந்தும் பயன் இல்லை*

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு 100 பேர் பதிவு செய்திருந்த னர். அவர்களில் 34 அரச ஊழியரை இக்கப்பலில் அனுப் புவதற்கு ஒழுங்கு செய்யப் பட்டது.

மன்னார் அரச அதிபர், மன்னார் பிரிகேடியர் மற்றும் படை அதிகாரிகளின் பணிப் புக்கிணங்க 34 பேரும் கப்ப லில் ஏற்றப்பட்டனர். இக் கப்பல் பேசாலைக்கு சென்றது.

காங்கேசன் துறைக்கு இக்கப்பல் இரவு 8 மணிக்கு சென்றபோதும் மறுநாள் காலை 10 மணிக்கே பயணிகள் கப்ப லில் இருந்து இறக்கப்பட்டு காங்கேசன் துறைக்கு கூட்டிச் செல்லப்பட்டனர்.

காங்கேசன்துறையில் இருந்து இப்பயணிகளை யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளுக்கு கூட்டிச் செல் வதற்கு லொறிகளும் ஒழுங்கு செய்யப்பட்டு காத்திருந்தன ஆனால் காங்கேசன்துறையில் உள்ள படையினர் இவர் களை யாழ்நகருக்கு செல்ல அனுமதிக்கவில்லை.

இவர்கள் காங்கேன்துறை யில் செவ்வாயும், புதனும் தங்க வைக்கப்பட்டு புதன் கிழமை மீண்டும் கப்பலில் மன் னாருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர்.

### *சாமி வரந்தந்தும் பூசாரி தடுப்பு*

''அரச ஊழியர்களாகிய எம்மை ஏன் யாழ்ப்பாணம் செல்ல படையினர் அனு மதிக்கவில்லையென்பது புரி யாதபுதிராக இருக்கிறது. சகல அதிகாரிகளிடமும் அனுமதி பெற்று முறையான ஒழுங்கு களின் படி சென்றும் சொந்த இடங்களுக்கு போக முடிய வில்லை. உறவினர்களை பார்க்க முடியவில்லை என திரும்பி வந்த அரசஊழியர்கள் அங்கலாய்க்கின்றனர்.

இதேவேளை முல்லைத் தீவு, கிளிநொச்சி பகுதிகளில் இருந்து பெருமளவு அகதிகள் மன்னார் பகுதியை நோக்கி இடம்பெயர்ந்து வருகின்றனர்.

சுமார் நூறு குடும்பங்கள் மறு பகுதிக்கு வந்து சேர்ந் திருப்பதாக தெரிவிக்கப்படு கிறது.

படையினரின் கட்டுப் பாட்டு பகுதியில் இருந்து கட் டுப்பாடற்ற பகுதிக்கு செல் லும் மக்களுக்கென மன்னா ருக்கும் விடத்தல் தீவுக்கும் இடையே இடம்பெற்று வந்த படகுச் சேவை இடைநிறுத்தப் பட்டுள்ளது.

# வாசகர் நெஞ்சம்

கல்வித் தடையை நீக்கிய தமிழக முதல்வர் கலைஞ ருக்கு, ஈழத்தமிழர் தலைவர் சந்திரகாசன் நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்கும் படத்தையும், அகதி மாணவர்களுக்குத் தமிழகக் கல்வியமைச்சர் பேராசிரியர் அன்பழகன் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகத்தின் சார்பில் குறிப்பேடுகளை வழங்கும் படத்தையும் முதல் பக்கத்திலேயே வெளியிட்டு அசத்தி விட்டீர்கள்.

ச. நீராத்திலிங்கம், சங்கரன்கோயில்.

கொள்ளையடிப்பதற்காகவே சந்திரிகா குடும்பம் நடத் தும் கொலைவெறிப்போர் பற்றிய முதல் பக்கக் கட்டுரை அருமை. சிறீலங்கா ராணுவ மந்திரி அனுருத்தரத்வத்தவின் மைத்துனர் சீவிலிரத்வத்த போர்த்தளவாடங்கள் கொள் முதல் செய்ததில் தரகுப் பணமாகவே ரூ 1400 கோடியைப் பெற்ற அநியாயத்தைத் தோலுரித்துக் காட்டியமைக்கு நன்றி.

தே. மகிந்தன், கோவை-1.

ஈழ அகதி மாணவர்களுக்கு கல்லூரிக் கல்வியில் மீண் டும் இட ஒதுக்கீடுகள் கிடைக்க வகை செய்த தமிழக முத லமைச்சருக்கு 'ஈழசுதந்திரன்' ஆசிரியத் தலையங்கத்தில் நன்றி தெரிவித்து விட்டு, அதேவேளை ''ஈழத் தமிழர்களுக் காக ஒதுக்கப்பட்ட இந்தக் கோட்டாவில்; ஈழப்போரைப் பயன்படுத்தி மேலைநாடுகளில் காலூன்றிக் கொண்டு ஈழத்தைப் பற்றிக் கவலையே படாத-இங்கு ஏதிலிகளாய்த் தவிக்கும் தங்கள் உடன் பிறப்புக்களை ஏறிட்டும் பார்க்காத 'விளைந்த காட்டுக் குருவிகள்' புகுந்து மேய்ந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் தமிழக அரசுக்கு இருக்கிறது'' என்று சுட்டிக்காட்டியிருப்பது அவசியமான தாகும்.

டி. ஜேசுதாஸ், மேல்பட்டி.

கொழும்புக்கு அருகில் உள்ள தீவு எனும் சின்னத்தீவில் குடியிருந்த 300 தமிழ்க் குடும்பங்கள் அங்கிருந்து துரத்தப் பட்டு, கொழும்பு நகரக் குப்பைமேட்டில் குடியமர்த்தப் பட்டிருக்கும் செய்தியை ஈழசுதந்திரனில் படித்துத் திடுக்கிட் டேன். இப்படியே எல்லாத் தீவுத் தமிழர்களையும் அகற்றி விடுவார்களோ என்று அச்சமாக இருக்கிறது.

V. S. மணி, தேவகோட்டை.

''இலங்கை : தமிழர் சிங்களர் ஒரு வரலாற்றுப் பின் னணி'' தொடர் கட்டுரையில் ''தமிழ்த் தேசியமும் இலங்கை முஸ்லிம்களும்'' என்ற பகுதி மிகச் சிறப்பாக எழுதப்பட்டி ருந்தது. தமிழ் பேசும் முஸ்லிம்கள் எங்கிருந்தாலும் தமிழ்த் தேசியத்திலிருந்து பிரிக்க முடியாதவர்கள் என்பதும், அவர் களின் வாழ்வும் தாழ்வும் தமிழ்த் தேசியத்தைச் சார்ந்தது தான் என்பதும் மறுக்க முடியாத உண்மை.

A. G. A. ஹமீதுராஜா, காயவ்பட்டினம்.

தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்து 1977 தேர்த லில் வென்ற தமிழர் விடுதலைக் கூட்டணி சாதித்ததென்ன? என்ற கேள்வியைத் தானே கேட்டுக்கொணடு, மட்டுநகர் த.வி. கூட்டணி பா.உ.ஜோசப் பரராசசிங்கம் அதற்கான பதிலாக ''சர்வ தேச ஆதரவைத் திரட்டவும் எமது போராட்டத்துக்கான ஆதரவை நாடி பிடித்துப் பார்க்கவுமே நாம் கொழும்புக்கு வந்தோம். நாங்கள் ஆதரவு பெறச் சென்ற நாடுகளெல்லாம் தனி நாட்டுக் கோரிக்கை ஒரு போதும் சரி வராது மாற்றுவழி ஒன்றைத் தேடுங்கள் என்று கூறித் தட்டிக்கழித்து விட்டன'' என்று கூறியிருக்கின்றார். அப்படியானால் பிற நாடுகள் ஆதரிக்கவில்லை என்பதால் தமிழீழக் கொள்கையை இவர்கள் விட்டு விட்டார்களா? அப் புறம் எதற்கு அந்தக் கட்சி? அதைக் கலைத்துவிட வேண் டியதுதானே !

J.S. மனோ, சென்னை-14.

www.padippakam.com




## ஆமி தப்புங்கணக்கு

என்னப்பா போனமுறையும் சுப்பையாண்ணையைக் காணேல்லை இந்த முறையும் வருவாரோ தெரியேல்லையே.

இங்க பார், அப்பா, சுப்பையாண்ணையே வந்துட்டார். வாங்கோ சுப்பையாண்ணை உங்களுக்கு ''ஆயுசு நூறு'' இப்பத்தான் உங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம்.

ஆயுசு நூறு வரைக்கும் ஏன் இருப்பான்! தம்பி உந்தக் கொடுமையளை பார்க்கிறதை விட கூடிய கெதியில போய்ச் சேர்ந்திரலாம்.

என்ன சுப்பையாண்ணை விரக்தியாய் பேசுகிறியள்?

பின்னையென்ன தம்பி

யாழ்ப்பாணத்தில பெரிசா வெற்றிக் கொடி நட்டுப் போட்டினம் எண்டு ஆமிக்காரர் பெரிசாய் பறை தட்டினவையள் கண்டியோ.

ஆனாலும் ஸ்ரான்லி ரோட்டில அமைச்சர் மீது நடந்த குண்டுத் தாக்குதல் தெரியும் மோனை சரி, தெரியாத விசயம் ஒண்டையும் சொல்லுலன் கேளுங்கோ.

அமைச்சர் மீது குண்டுத் தாக்குதல் நடைபெற்று விட்டது என்று யாழ் நகரைச் சுற்றியிருந்த இராணுவத்தினருக்கு தகவல் கிடைத்ததும் அவர்கள் தாங்கள் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு பரவலாக சுட்டுத் தீர்த்திருக்கினமாம் கண்டியோ.

இதனால் கணக்கில வராத பல உடல்கள் தெருக்களில் கிடந்ததாகவும் கண்ணாலகண்ட சிலர் நேரிடையாகச் சொல்லிருக்கினம்.

இது மட்டுமல்ல யாழ்ப்பாணத்துக்குள்ள போன பல பேர் இப்ப ஏன்தான் யாழ்ப்பாணத்துக்குள்ள வந்தம் எண்ட நினைப்பிலையும் இருக்கினமாம்.

ஏன் எண்டால் இராணுவம் யாழ்ப்பாணத்தை பிடிச்சது எண்ட பேர் தான் கண்டியோ. ஆனாலும் புலிகள் இருக்கேக்குள்ள அங்கை இருந்த சுதந்திரம் பொருட்களின் விலை எல்லாம் இப்ப இல்லை எண்டும் சொல்லப்படுகுது.

மக்கள் ஆறுமணியெண்டால் வீட்டுக்குள்ள அடைபட்டிர வேணும் எண்டும் எழுதப்படாத ஒரு ஊரடங்குச் சட்டமும் ஆமிக்காரர் அங்கை நடைமுறைப்படுத்தியினமாம். இது எப்பிடி இருக்கு.

முல்லைத்தீவு அடியோட யாழ்ப்பாணத்தில கெட்டித்தனம் காட்டிய ஆமிக்காரர் பலர் வாயடைச்சுப் போட்டினமாம்.

ஏன் தெரியுமே, நாங்கள் எல்லாம் புலிகளை ஓட ஓட விரட்டிப் போட்டினம் இனி எங்க அவையள் தலையெடுக்கப் போகினம் என்று நினைச்சது தான் அதுக்குக் காரணமாம்.

# செய்ய வேண்டும் அல்லது செயல்பட விட வேண்டும்!

"-கேயார்-"

யாழ்ப்பாணத்தின் மீது பேரிடித் தாக்குதல் நடத்தி யாழ்ப்பாணம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக இராணுவம் கூறி வருவதையடுத்து ஏதோ இனப் பிரச்சினைக்கான போர் முடிந்து விட்டது போலவும், விடுதலைப் புலிகள் அடக்கி ஒடுக்கப்பட்டு விட்டார்கள் என்பது போலவும், ஒரு மாயையை இலங்கை அரசாங்கமும் அதற்கு ஒத்து ஊதும் இராணுவ அதிகாரிகளும் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

இதற்கெல்லாம் ஆப்பு வைத்ததுபோல் ''எம்மை எந்தக் கொம்பனாலும்'' அடக்க முடியாது என்பது போல இலங்கை அரசை ஆட வைக்கும் அதிரடி நடவடிக்கையை முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற் கொண்டனர்.

### வெற்றி தோல்விகள்

இலங்கையில் போராட்ட வரலாற்றிலேயே அதிகப்படியான அதாவது ஒரே முறைத் தாக்குதலில் ஏறத்தாழ ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமான இராணுவத்தினரை கொன்றொழித்து இராணுவத்தினரின் கவச வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள், ஏராளமான ஆயுதங்கள் போன்றவற்றை எடுத்துச் சென்று முகாம் முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து முத்திரை பதித்துள்ளார்கள் விடுதலைப்புலிகள். முல்லைத்தீவு இராணுவ முகாம் பறிபோனதை சகித்துக்கொள்ள முடியாத இலங்கை அரசு மக்கள் விழித்துக்கொண்டு எதிர்க்கேள்வி கேட்பதற்கு முன்பாக ஏதாவது செய்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில் தான் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து பரந்தன், கிளிநொச்சி பகுதிகளைக் கைப்பற்றுவதற்கான ஒரு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு மூக்குடைபட்ட நிலையில் மீண்டும் முகாமுக்கு திரும்பி விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் போராட்ட வரலாற்றில் இராணுவமும்-புலிகளும் பல இடங்களில் பல விதமாக மோதல்களை மேற்கொண்ட போதும் வெற்றி-தோல்விகள் மாறிமாறித் தான் அமைந்திருக்கின்றன.

### சிறீலங்காவின் கங்கணம்

இந்த விளையாட்டில் மக்கள்தான் பகடைக் காய்களாக பயன்படுத்தப்பட்டு வந்தனர். மேலும் போதும் இந்தப் போராட்டம் என்று நினைக்கும் அளவுக்கு மக்கள் சோதனைகளை அனுபவித்து விட்டார்கள். சொத்துக்களை இழந்து விட்டார்கள். உற்றார் உறவினர் பெற்ற பிள்ளைகளைக் கூட இழந்து விட்டார்கள். தமிழர்களது எதிர்காலமே என்ன என்ற கேள்வியில் நாடு போய்க்கொண்டிருப்பதையும் உலகம் அறிந்து கொள்ளாமல் இல்லை.

இலங்கையில் அரசியல் மாற்றம் ஏற்பட்ட போது தமிழ் மக்கள் நினைத்தது வேறு. ஆனால், நடந்ததும் நடந்து கொண்டிருப்பதும் வேறு. இலங்கை அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்தவரை வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள தமிழர்கள் அனைவரும் விரட்டப்பட வேண்டும் என்றும்-அங்கு மீண்டும் சிங்கள குடியேற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றும்-விடுதலைப்புலிகளை முற்றாக ஒழித்து விட வேண்டும் என்றும் இராணுவமும் இலங்கை அரசும் கங்கணம் கட்டி நிற்கின்றன.

### தலையீடு தேவை

இந்த நிலையில் தான் இனப்பிரச்சினைக்கான தீர்வில் உலக நாடுகளின் தலையீட்டினைத் தவிர்த்துக் கொண்ட சந்திரிகா அம்மையார் இந்தியாவின் ஆதரவைக் கோரினர். இந்தியாவின் அப்போதைய நரசிம்மராவ் அரசு சந்திரிகாவின் தாளத்துக்கெல்லாம் ஆட்டம் போட்டது.

தற்போதைய அரசாங்கமும் இந்தத் தொடர்நிலைக்கு உள்ளாகாமல் மாநில அரசாங்கங்களுடன் குறிப்பாக தமிழ் நாட்டுஅரசுடன் ஒன்றிணைந்து இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தலையிட்டு உதவுவதே நிலையான தீர்வுக்கு வழி வகுக்கும்.

இல்லையேல் உலக நாடுகளில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கறை கொண்டுள்ள நாடொன்றைத் தலையிடச் செய்து பிரச்சினைத் தீர்வுக்கு வழிகாட்ட வேண்டும். ''தான் செய்ய வேண்டும் அல்லது பிறரையாவது செய்யவிட வேண்டும்'' என்ற நோக்கத்தில் இந்திய அரசு நடவடிக்கை எடுக்குமானால் தொடரும் அழிவுகளைத் தவிர்க்க முடியும்.

### கொன்றொழிக்கும் திட்டம்

அதே நேரம் தமிழகத்தில் உள்ள தமிழ் அகதிகளை மீளவும் தாயகத்துக்கு அழைத்துச் செல்வது தொடர்பான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதில் இலங்கை அரசாங்கம் முனைந்துள்ளது. தற்போதைய போரில் பாதிக்கப்பட்ட சுமார் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வடக்கு கிழக்கு பகுதிகளிலேயே அகதிகளாக இருக்கிறார்கள்.

அவர்களுக்கான மறுவாழ்வையோ அல்லது நிவாரண உதவிகளையோ ஒழுங்காக வழங்கிட முடியாத கையாலாகாத இலங்கை அரசு தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளையும் இலங்கைக்கு அழைத்துச் சென்று கொன்றொழிப்பதற்கான திட்டத்தையே வகுத்துள்ளது.

இது விடயத்தில் இந்திய அரசாங்கம் சரியான நிலையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே ஈழத்தமிழர்களது விருப்பமாகும்.

### வெட்ட வெளிச்சமாகும் உண்மை

ஈழப் போரில் விடுதலைப்புலிகளை வெற்றிகொள்ள முடியாது என்பது இலங்கை இராணுவ வட்டாரத்திலேயே ஒத்துக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

இருந்தும் அதனை முறியடிக்கும் நோக்கில்தான் அரசாங்கம் இப்போது பல நாடுகளிடம் கையேந்தி நவீன ரக ஆயுதங்களையும் விமானங்களையும் கொள்முதல் செய்து புதிய புதிய தாக்குதல்களைத் தொடங்கியுள்ளது. இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் துளி கூட இல்லை என்பதும் இப்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

இராணுவ நடவடிக்கை தொடர்வதன் மூலம் இலங்கை அரசின் பொருளாதார முதுகெலும்பு உடைந்து போவதையும் அந்த நாட்டு அரசாங்கம் கண்டு கொள்ளாமலில்லை. இருந்தும் ஒரு வரட்டுப் பிடிவாதம் காரணமாக வெற்றிபெற முடியாத ஒன்றை வெற்றி பெற முயல்வது வீண் அழிவுக்கே வழி வகுக்கும்.

# 5 பிரிட்டிஷ் எம்.பி.க்கள் இலங்கை வருகை

பிரிட்டிஸ் எம்.பி.க்களின் குழுவொன்று இலங்கைக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றது. வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் அழைப்பின் பேரில் இவர்கள் விஜயம் செய்யவுள்ளனர்.

ஜேம்ஸ் ஹில் எம்.பி.(கன்ஸர்வேடிவ் கட்சி) ரொம் கொக்ஸ் எம்.பி. (தொழில் கட்சி) டேவிட் யங் எம்.பி. (தொழில்கட்சி) றொஜர் சிம்ஸ் எம்.பி. (கன்ஸர்வேடிவ் கட்சி) டேவிட் பிரபு எம்.பி. (லிபரல் ஜனநாயக கட்சி) ஆகியோரே அந்த எம்.பி.க்களாவர்.

அவர்கள் இலங்கையில் தங்கும்போது பிரதமர், சபாநாயகர் கே.பி.இரத்நாயக்க, வெளிநாட்டலுவல்கள், அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், நீதி, அரசியல் விவகார அமைச்சர்பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், வர்த்தக உணவு-வாணிப அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரம ரதன, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி.வி. குணரத்ன, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்திப்பர்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அரச எடுத்துவரும் முயற்சி குறித்தும், பொருளாதார அபிவிருத்தி குறித்தும் பிரிட்டிஷ் எம்.பி. க்கள் தெரிந்து கொள்வர்.

## தாண்டிக்குளம் போக்குவரத்து தற்காலிக தடை

'அலைகள் ஓய்வதில்லை' தாக்குதல் நடவடிக்கையை அடுத்து தாண்டிக்குளத்தினூடான போக்குவரத்து தடைப் பட்டுள்ளது.

இதனால் வவுனியா வருவதற்கான பயணிகளும் வட பகுதி செல்வதற்கான பயணிகளும் இருபக்கங்களிலும் பெருமளவில் தங்கியுள்ளனர்.

வன்னிப்பிரதேசத்தில் தங்கியுள்ள தம் பிள்ளைகளை பார்க்க போக முடியவில்லையென பல பெற்றோர் வவுனியா அரச அதிபர் கே.கனேஷிடம் முறையிட்டுள்ளனர்.

இவர்களின் முறைப்பாடுகளை கேட்ட அரச அதிபர் வடபகுதி செல்வதற்கு விரைவில் நடவடிக்கையெடுப்பதாக பெற்றோர்களிடம் உறுதியளித்துள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com



# இலங்கை: தமிழர் - சிங்களர் ஒரு வரலாற்றுப் பின்னணி

தொகுப்பு : முனைவர் அரு. கோபாலன்

## 6. குடிசன விகிதாசாரத்தில் பேரினவாத மோசடி

முஸ்லிம்களைத் தமிழ் பேசும் இனத்திலிருந்து பிரிக்க அவர்கள் பால் சிங்களத்தைப் புகுத்தவும், அது முடியாவிட்டால், அவர்களை அரபுவழ்சாவளியினர் என்று சொல்லி, அரபு மொழியையே அவர்களின் தாய்மொழியாகவும் வரிக்கச் செய்யவும் வரிந்து கட்டிக்கொண்டு வேலை செய்யும் சிங்களப் பேரினவாதம், அவர்கள் நிலத்தைப் பறிப்பதில்மட்டும் ஏனையத் தமிழர் நிலத்தைப் பறிப்பதுபோலவே முனைப்பாக நடந்து கொள்கிறது. அதை முஸ்லிம் பிரமுகரான எம்.ஐ.எம். முஹியத்தீன் மொழியிலேயே காண்போம் :

அ) கிழக்கு மாகாணத்தில் 1921ம் ஆண்டு சிங்களவரின் சனத்தொகை நான்கு சதவீதம் மட்டுமே. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தாலும், பேரினவாத ஆட்சியாளரின் அனுசரணையோடு கள்ளத்தனமாகக் குடியேறியவர்களின் எண்ணிக்கையோடும் கூட்டு மொத்தமாக 1981ம் ஆண்டுக் கணக்குப்படி சிங்களவரின் குடிசன விகிதாசாரம் 24 சதவீதமாக அதிகரித்துள்ளது. பாரம்பரிய முஸ்லிம் தமிழ்ப் பகுதிகளில் முதலில் சிங்களவரைக் குடியேற்றி விட்டு, அதன் பின்னர் தமக்குள்ள ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி அப்பகுதிகளைச் சிங்கள உபஅரசாங்க அதிபர் பிரிவுகளாகவும், கிராம சேவையாளர் பிரிவாகவும் எல்லையிட்டு இறுதியில் அரச திணைக்களங்கள் மூலம் வரைபடங்களைத் தயாரித்துப் பேரினவாத ஆட்சியாளர்கள் எல்லோரையும் ஏமாற்றுகின்றனர்.

ஆ) திருகோணமலை மாவட்டத்தில் 1971ஆம் ஆண்டுக் கணக்குப்படி தமிழர் 39 சதவீதம், முஸ்லிம்கள் 33 சதவீதம், சிங்களவர் 28 சதவீதம். ஆனால் 1976 ஆம் ஆண்டுத் தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக் குழு இங்கு புதிதாகக் குடியேறிய சிங்களவருக்காக 700 சதுர மைலுக்குக் கூடுதலான நிலப்பரப்பை உள்ளடக்கிய 'சேருவல' எனும் தேர்தல் தொகுதியை ஏற்படுத்தியது. 1048 சதுர மைல் பரப்புள்ள திருகோணமலை மாவட்டத்தில் 24 சதவீத் சிங்களவர், 70 சதவீதக் காணியை ஆக்கிரமித்துக் கொண்டனர். 76 சதவீதமிருக்கும் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் மிஞ்சியது ஆக 348 சதுரமைல் காணி மட்டுமே.

அம்பாறை மாவட்டத்தில் 1971 ஆம் ஆண்டுக் கணக்குப்படி முஸ்லிம்கள் 47 சதவீதம், சிங்களவர் 30 சதவீதம், தமிழர் 23 சதவீதம். கல்லோயாத் திட்டத்தின் கீழ் புதிதாகக் குடியேறிய சிங்களவருக்கு 1976 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அம்பாறைத் தொகுதியின் விஸ்தீரணம் ஏறக்குறைய 880 சதுர மைல் இங்கு சிங்களவர் அதிகப்படியாக வரக்கூடிய வகையில் ஏற்படுத்தப்பட்ட லஹுகலை, தமணை A.G.A பிரிவுகள்விஸ்தீரணம் 370 சதுர மைல். கூட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால் 1981ஆம் ஆண்டுக் கணக்குப்படி 36 சதவீதம் சிங்களவர் ஏறக்குறைய 1350 சதுரமைல் அதாவது 70 சதவீதக்காணியைப் பெறக்கூடியதாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இ) D.R.Oபிரிவு முறைப்படி இன்றைய அம்பாறை மாவட்டமும் மட்டக்களப்பு மாவட்டமும் ஒன்றிணைந்திருந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருந்த பாணமைப்பற்று, அக்கரைப்பற்று, சம்மாந்துறைப்பற்று, கரவாகு நிந்தவூர்ப்பற்று எனும் 4பிரிவுகளும், தமிழர்கள் அதிகப்படியாகஇருந்த கோறளைப்பற்று, ஏறாவூர்பற்று, மண்முனை மேற்குப்பற்று, மண்முனை எருவில் போரதீவுப்பற்று எனும் 4 பிரிவுகளும், சிங்களவர் அதிகப்படியாக இருந்த பிந்தனைபற்று, வெவகம்பற்று எனும் இரு பிரிவுகளும் இருந்தன.

ஈ) திருகோணமலை மாவட்டத்தில் கட்டுக்குளம் பற்றுகிழக்கு, நகரமும் கிறவட்டும் எனும் இருபிரிவுகள் தமிழர்கள் அதிகப்படியாகவும், கிண்ணியாப் பிரிவு, கொட்டியார்பற்றுப் பிரிவு எனும் இரு பிரிவுகளில்முஸ்லிம்கள்அதிகப்படியாகவும், கந்தளாய் பிரிவு கட்டுக்குளம் பற்று மேற்கு எனும் இருபிரிவுகளில் சிங்களர் அதிகப்படியாகவும் இருந்தனர்,

ஆனால் மேற்படி மாற்றங்களெல்லாம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால் நிகழ்ந்ததன்றி, இயல்பாக நிகழவில்லை. தமிழர்களின் நிலவுரிமையைப் பறித்தது போலவே முஸ்லிம்களின் நிலவுரிமையைப் பறிப்பதிலும் சிங்களப் பேரினவாதம் தயக்கம் காட்டவில்லை என்பதையே இது புலப்படுத்துகிறது.

ஆக, முஸ்லிம்கள்-தமிழர்கள் பூசலும் சிங்களப் பேரினவாதத்தின் சுயநலத்திற்காகத் தூண்டிவிடப்பட்டதன்றி, யாழ்ப்பாணத் தமிழரால் உருவாக்கப்பட்டதல்ல என்பது விளங்கும்.

தவிரவும், இலங்கையின் இன விகிதாசாரம் சிங்களப் பேரினவாத ஆட்சியாளரால் காலத்திற்குக் காலம் எப்படி மாற்றப்பட்டு வந்திருக்கிறது என்பதைப் பின்வரும் அட்டவணை விளக்கும்:

| ஆண்டு | சிங்களர் | ஈழத்தமிழர் | மலையகத்தமிழர் | முஸ்லிம்கள் |
|---|---|---|---|---|
| 1901 | 62.2 % | 26.7 % | 8.2 % | 6.4 % |
| 1946 | 69.2 % | 11.01 % | 11.7 % | 5.6 % |
| 1953 | 69.3 % | 10.9 % | 12.0 % | 5.7 % |
| 1963 | 71.2 % | 11.1 % | 16.6 % | 6.3 % |
| 1971 | 71.2 % | 11.1 % | 9.4 % | 6.5 % |
| 1981 | 73.98 % | 12.6 % | 5.56 % | 7.12% |

சரி; மலையகத் தமிழரின் விகிதாசாரம் எப்படி மாறி வந்திருக்கிறது? இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் அவர்களின் தொகை எப்படி மாறி வந்திருக்கிறது? என்பதை பின்வரும் அட்டவணையில் பார்ப்போம் :

| ஆண்டு | இலங்கை மொத்த மக்கள் தொகை | மலையகத் தமிழரின் மொத்த மக்கள் தொகை | மலையகத்தமிழர் சதவீதம் |
|---|---|---|---|
| 1911 | 41,06,400 | 5,31,000 | 12.0 |
| 1921 | 48,88,600 | 6,02,700 | 13.4 |
| 1931 | 53,06,400 | 8,18,500 | 15.4 |
| 1946 | 66,57,300 | 7,80,600 | 11.7 |
| 1953 | 80,97,900 | 9,74,100 | 12.1 |
| 1963 | 105,82,000 | 11,23,000 | 11.6 |
| 1963 | 126,89,900 | 11,74,000 | 9.3 |

இவர்களில் பெருந் தோட்டத் துறையில் ஈடுபட்ட மலையகத் தமிழர்

| | | |
|---|---|---|
| 1946 | 6,65,855 | 88.8% |
| 1953 | 8,15,000 | 83.6% |
| 1963 | 9 32,099 | 82 5% |
| 1971 | 9,51,785 | 81 9% |

[7-ம் பக்கம் பார்க்க]

# மடல்வழிச் செய்திகள்

## கடவுளுக்கு நன்றி

யாழ்ப்பாணத்தில் இருந்து 'பா' என்பவர் சென்னையில் 'இ' என்பவருக்கு எழுதிய கடிதம்:

26-5-96 நாங்கள் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தோம். வீட்டுக் கூரைகள், வீட்டு சுவர்கள், உடுப்புகள், தளவாடங்கள் யாவும் சேதம் அடைந்திருந்தது. இவற்றை எல்லாம் நாம் பார்த்து வேதனைப்பட்டுக் கொண்டு ஏதோ கடவுள் உயிருடன் இருக்க வைத்ததற்கு நன்றி கூறி வாழ்கிறோம். தங்கைமாரின் வீடுகளும் பலத்த சேதம்.

இப்போது பாடசாலைகள் நடைபெறுகின்றன. ஆஸ்பத்திரி இயங்குகிறது. அரிசிக்குத்தான் தட்டுப்பாடு நிலவுகிறது. இவ்வாறு அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

(இக்கடிதம் யாழ்ப்பாணத்தில் இருந்து 16-6-96 எழுதப்பட்டது)

## வீட்டில் ஆமி இருக்கிறார்கள்

யாழ்ப்பாணத்தில் இருந்து பத்தன் என்பவர் சென்னையில் உள்ள 'அ' என்பவருக்கு எழுதிய கடிதம்:

இவ்விடம் நாம் நலம் என்று எழுத முடியாது. ஏனென்றால் எங்களுடைய வீட்டில் ஆமி இருக்கிறார்கள். இனி எப்போது வருவார்களோ தெரியாது. யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகளும் வெளிவரத்தொடங்கிவிட்டன. ஓரளவுக்கு உள்ளூர் செய்திகள் போடுகிறார்கள்.

இவ்வாறு அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

(16-7-96 யாழ்ப்பாணத்தில் இருந்து எழுதப்பட்டிருந்தது.)

## நிலைமை நன்றாக இல்லை

யாழ்ப்பாணத்தில் இருந்து 'ப' என்பவர் சென்னையில் 'அ' என்பவருக்கு எழுதிய கடிதம்;

இங்கு நிலை இன்னும் நன்றாக இல்லை. அனேகமாக எல்லா சந்திகளிலும் சோதனைச் சாவடிகள் இருக்கின்றன. எல்லோரும் இறங்கி நடந்துதான் போகவேண்டும். சில இடங்களில் ஆண்கள் ''ஐடென்ரி'' கார்ட் எல்லாம் காட்டித்தான் போக வேண்டும்.

(18-7-96 இல் இக்கடிதம் யாழ்ப்பாணத்தில் இருந்து எழுதப்பட்டிருந்தது)

*(ஆர்...ஆர்..எஸ்)*

# இரண்டாயிரம் பேர் விசாரணையில்

கொழும்பு மற்றும் நாட்டின் தென்பகுதியிலிருந்து ரயிலிலும் பஸ்ஸிலும் வவுனியாவை வந்தடைந்த சுமார் இரண்டாயிரம் பேர் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

தெஹிவளை ரயில் நிலையத்தில் குண்டு வெடிப்பு இடம்பெற்ற தினத்திற்கு மறுநாள் வியாழக்கிழமை காலையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை வவுனியாவை வந்தடைந்த ஆண்களும் பெண்களும் தாண்டிக்குளத்தில் வைத்து விசாரிக்கப்படுகின்றனர்..

தெஹிவளை குண்டு வெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடைய எவராவது வவுனியாவுக்கு தப்பி வந்துள்ளனரா என்பதை விசாரித்து உறுதி செய்து கொள்வதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பொலீஸார் தெரிவித்தனர்.

விசாரணை முடிந்ததும் குற்றமற்ற சகலரும் விடுதலை செல்யப்படுவசெனவும் பொலீஸார் கூறினர்.

### வவுனியாவில் சோதனைச் சாவடி கெடுபிடிகள்

இதேவேளைவன்னிமாவட்டிலிருந்து புறப்பட்டோரும் சுமார் இரண்டாயிரம் பேரளவில் வவுனியாவுக்கு வர முடியாமற் நொச்சிமோட்டையில் காத்துக்கிடப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாண்டிக்குளம் - நொச்சிமோட்டை போக்குவரத்து தடைப்பட்ட நிலையிலேயே உள்ளது.

வவுனியாவில் வீதிச் சோதனை கடுமையாக்கப்பட்டுள்ளது. சந்தேகத்திற்கு இடமானோர் மீது நோட்டம் செலுத்தப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# இலங்கை: தமிழர்-சிங்களர்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் குடியேற்றத்தைப் போலவே வெளியேற்றமும் கூடவே நடந்து வந்திருக்கிறது என்பதையும் பின்வரும் அட்டவணை மூலம் புரிந்து கொள்ளலாம்:

| ஆண்டு | குடியேற்றம் | வெளியேற்றம் |
|---|---|---|
| 1843 | 47 028 | 19 698 |
| 1851 | 57,464 | 31 443 |
| 1861 | 68,415 | 52 185 |
| 1871 | 102,511 | 82,47 |
| 1881 | 57,850 | 52,752 |

இங்கே மலையகத் தமிழர் (இந்திய வம்சாவழி)கள் என்போர் வரலாற்று காலத்திற்கு முன்பு எப்படியிருந்தாலும், 19ஆம் நூற்றாண்டில் இலங்கையைக் கைப்பற்றிய ஐரோப்பியக் காலனியாட்சியாளரால் இலங்கையில் வர்த்தகப் பயிர்களை-தோட்டத் தொழிலை மேற்கொண்டு இலாபம் சம்பாதிப்பதற்காக தமிழ்நாட்டிலிருந்து ஆசைகள் பலகாட்டி வலுவந்தமாக அழைத்து வரப்பட்டவர்களேயாவர்.

காடு திருத்தி நாடாக்கியும், குளம் தொட்டு வளம் பெருக்கியும் இலங்கையின் பொருளாதார நலத்துக்கு உழைத்த அவர்கள் தொடக்கத்தில் உயிர் கொடுத்துதான் அந்த உயர்நிலையை உருவாக்கினார்கள். ஆம்; இலங்கையில் உற்பத்தியான ஒவ்வொரு காப்பி, இரப்பர், தேயிலைச் செடிக்கும் ஒரு மலையகத் தமிழன் தன் உடலையே உரமாக்கி, குருதியையே நீராக்கி, உயிர் கொடுத்துத்தான் பயிராக்கியிருக்கிறான்.

ஒப்பந்தக் கூலிகள் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட அவர்கள் தோட்டங்களில் ஆடு மாடுகளைப் போபி அடைக்கப்பட்டு, வெள்ளைத் துரைமாராலும், கறுப்புக் கங்காணிமாராலும் அடிமைகளைப் போலத்தான் வெளியுலகம் தெரியாதவண்ணம் வேலை வாங்கப்பட்டனர். ஆமாம்; அவர்களுக்குத் தாங்கள் வேலை செய்யும் தோட்டம், குடியிருக்கும் லையன் வீடுகளைத் தவிர, வேறு உலகம் தெரியாது.

வெள்ளையர்கள் சுரண்டியது ஒருபுறமிருக்க இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகு இந்த மலையகத் தமிழர்களின் உழைப்பினால் பெற்ற ஆதாயம் வருமாறு:

### தேயிலை

ஏக்கர் பரப்பு, உற்பத்தி, ஏற்றுமதி வருவாய்

| ஆண்டு | ஏக்கர் பரப்பு | உற்பதி மில்லியன் இராத்தல் | ஏற்றுமதி மில்லியன் இராத்தல் | ஏற்றுமதி வருவாய் மில்லியன் போய் |
|---|---|---|---|---|
| 1568 | 597 490 | 496 0 | 459.1 | 1,162 |
| 1970 | 592 499 | 462 8 | 468 0 | 1,120 |
| 1971 | 597,191 | 470 1 | 480 0 | 1,145 |
| 1975 | 597 691 | 471.1 | 468 9 | 1,932 |
| 1976 | 594,481 | 433.3 | 440 8 | 2,100 |
| 1977 | 558,024 | 459 8 | 409 5 | 3 502 |
| 1978 | 600 228 | 438 7 | 424 6 | 6,401 |

### தேயிலை உற்பத்தியாகும் நிலப்பரப்பு-1978

| அளவு | மொத்த ஏக்கர் |
|---|---|
| 10 ஏக்கருக்குக் குறைவானவை | 123 528 |
| 10 முதல் 100 ஏக்கர் | 93 616 |
| 100 முதல் 500 ஏக்கர் | 148,040 |
| 500 ஏக்கருக்கு மேல் | 235 042 |

இவ் ஏற்றுமதி அதிகரிப்பால் மாத்திரம் 1978ல் சிறீலங்கா அரசுக்கு 66 கோடியே 44 லட்சத்து, 50 ஆயிரம் ருபாய் மேலதிக வருவாய் கிடைத்தது. அதில் ஒரு சதம் கூடத் தொழிலாளருக்கு வழங்கப்படவில்லை.

### ரப்பர்

ஏக்கர் பரப்பு, உற்பத்தி ஏற்றுமதி வருவாய்

| ஆண்டு | ஏக்கர் பரப்பு | உற்பத்தி மில்லியன் இராத்தல் | ஏற்றுமதி மில்லியன் இராத்தல் | ஏற்றுமதி வருவாய் மில்லியன் ருபாய் |
|---|---|---|---|---|
| 1968 | 572 909 | 328 0 | 328.3 | 331 |
| 1970 | 569 973 | 350 9 | 354.2 | 440 |
| 1971 | 567,994 | 311 0 | 285 2 | 307 |
| 1975 | 562 494 | 327.9 | 3[illegible]4 9 | 654 |
| 1976 | 560 872 | 335.4 | 299.8 | 830 |
| 1977 | 559 850 | 322.0 | 265.4 | 931 |
| 1978 | 559,257 | 343 1 | 304.3 | 2,025 |

### ரப்பர் உற்பத்தியாகும் நிலப்பரப்பு-1978

| அளவு | மொத்தஏக்கர் |
|---|---|
| 10 ஏக்கருக்குக் குறைவானவை | 171.034 |
| 10 முதல் 100 ஏக்கர் | 1[illegible]0.137 |
| 100 ஏக்கருக்கு மேல் | 258.096 |

மொத்த ஏற்றுமதி வருவாயில் தேயிலை-ரப்பரின் பங்கு

| ஆண்டு | மொத்த ஏற்றுமதி வருவாய் மில்லியன் ருபாய் | தேயிலையால் பெறப்பட்ட ஏற்றுமதி வருவாய் மில்லியன் ருபாய் | ரப்பரால் பெறப்பட்ட ஏற்றுமதி வருவாய் மில்லியன் ருபாய் | தேயிலை ரப்பர் பெற்ற ஏற்றுமதி விகிதம் |
|---|---|---|---|---|
| 1968 | 1,976 | 1,162 58 8% | 331 16.75% | 75.55% |
| 1969 | 1,875 | 1,152 56 6% | 431 22.98% | 79 58% |
| 1970 | 1,995 | 1,120 56.1% | 440 22.1 % | 78 2 % |
| 1971 | 1,930 | 1,145 59.32% | 307 15 9 % | 75.22% |
| 1977 | 6.615 | 3,502 52 9% | 931 14 1 % | 67.0 % |
| 1978 | 13,175 | 6,401 48.6% | 2 025 15 4 % | 64 0 % |
| 1979 | 15,228 | 5,722 37.6% | 2.502 16 4 % | 54 2 % |
| 1980 | 17.179 | 6,170 35.9% | 2,633 15 3 % | 51.2 % |
| 1981 | 19,658 | 6,430 32.7% | 2,880 14.7 % | 47.4 % |

### தேசிய உடைமையாக்கிய பின்னர் தேயிலைத் தோட்ட உரிமை

Distribution of Sri Lanka's tea acreage Serice introduction of the Land Reform Law (No 1 of 1972) and as at end of 1978 is Shows below :

| | | எஸ்டேட்டுகளின் எண்ணிக்கை | ஏக்கர்கள் |
|---|---|---|---|
| 1. | சிறீலங்கா அரசினர் தோட்டக் கழகம் | 316 | 154,939 |
| 2. | ஜனதா தோட்ட அபிவிருத்தி வாரியம் | 305 | 190,079 |
| 3 | நிலச் சீர்திருத்த ஆணையம் | 40 | 4,109 |
| 4. | சிறீலங்கா தேயிலை வாரியம் | 7 | 1,354 |
| 5. | ஜனவாச வாரியம் | 32 | 1,788 |
| 6. | உதார கூட்டுறவு தோட்ட அபிவிருத்தி வாரியம் | 8 | 1 427 |
| 7. | கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை | 169 | 16,384 |
| 8. | உற்பத்தி ஆணையம் | 2 | 35 |
| 9. | இலங்கை வங்கி | 2 | 567 |
| 10. | பொது அறக்கட்டளை | 2 | 67 |
| 11. | சீனி ஆணையம் | 1 | 48 |
| 12. | தேசிய வேளாண்மை அபிவிருத்தி அதிகார சபை | 13 | 4,132 |
| 13. | சிற்றுடைமை அரசு முகாமைகள் | 19 | 98 |
| 14. | இலங்கைத் தனியார்கள் | 2,771 | 95,356 |
| 15. | இலங்கையரல்லாத தனியார்கள் | 73 | 4 705 |
| 16. | இலங்கையர் மற்றும் இலங்கையரல்லாத தனியார்கள் | 11 | 1,658 |
| 17. | சிற்றுடைமை இலங்கையரான தனியார்கள் | 129,033 | 123.430 |
| | | 132,809 | 600,226 |

ஆதாரம் : Sri 'Lanka Tea Board'

நாட்டுமைக் கொள்கை என்பது எத்துறையில் செயல்படுத்தப் பட்டாலும், அதில் பாடுபடும் தொழிலாளர்களுக்கு நன்மை பயப்பதாக இருந்தால் வரவேற்கத் தக்கதுதான். ஆனால், சிறீலங்கா அரசாங்கம் மேற்கொண்ட இந்த நாட்டுடைமை என்பது, தோட்டத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்த மலையகத் தமிழர்களை அங்கிருந்து வெளியேற்றவும், அந்நிலங்களை, தாழ்நிலச் சிங்களவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கவுமான நோக்கத்தோடு செய்யப்பட்டதால் அது மலையகத் தமிழ் மக்களுக்குப் பேரிடியாகவே அமைந்தது. ஏனெனில், அவர்களுக்குக் குடியுரிமை வாக்குரிமையில்லாததால், வேறு தொழில் செய்யவும் வாய்ப்பில்லாததால், அவர்களுடைய வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றி, பிச்சைக்காரர்களாய் அலைய வைத்து, பட்டினி கிடந்து சாகவே வழி வகுத்தது.

அத்தனையும் இனவாத அடிப்படையிலேயே செய்யப்பட்டது. அதைச் சூத்திரதாரியாக இருந்து செய்தவர் இன்றையக் குடியசுத் தலைவரான சந்திரிகா குமாரதுங்க என்பதை மறந்து விடக்கூடாது. ஆம்; இன்று இவரின் கீழ் இவர் தாயார் பிரதமராக உள்ளார். அன்றோ அவரின் தாயாரின் ஆட்சியில் மகள் அதனைச் செய்து முடித்தார்.

(தொடரும்)

## சுதந்திர மலரின் இதந்தரு இதழ்கள்

ஈழம் என்ற பெயரில்
தமிழன் அழிகிறான்
தமிழரின் தலையெழுத்து
அழிவதென்று ஆனதோ !

பிறக்கும் குழந்தை கூட
விதியை நினைத்து அழுதது
குழந்தை வளர்ந்த பின்பு
ஈழத்தை காக்கப் போராடுது
போர்க்களத்திலேயே சந்ததி அழிவதால்
குழந்தை வேண்டாம் என்று
இன்றைய ஈழ அன்னையர் நினைக்கிறார்கள் !

கருவில் உள்ள குழந்தையைக்கூட அழிக்கிறார்கள்
இது கூடாது; கூடவே கூடாது
ஈழத் தாயே ! பெற்றெடு உன் குழந்தைகளை
வீரனாக, வீராங்கனைகளாக மாற்றிடு
தமிழ் ஈழம் ஒருநாள் மலரும்
அந்த மலரின் இதழ்களாய்
உன் மக்கள் மணம் பரப்பட்டும் !

டி. கண்ணன்
இ-அ. முகாம், புளியம்பட்டி

www.padippakam.com



# கவிதைச் சரம்

## வெல்லும்; ஈழம் வெல்லும்

திரைகடலோடித் திரவியம் பலப்பல தேடினோமன்று!
கரையில்லா ஆழ்கடலில் அழுதழுது தத்தளித்தோமின்று!!
வரைமுறையின்றி வஞ்சகரால் நாளும் வதைக்கப்படுகிறோம்
இரை தேடிய சிங்களச் சிங்கத்திற்கு தமிழ்ச்குருடன் தட்டுப்பட்டானே...
நுரை கக்கி நொந்து, வெந்து தினமும் செத்து மடிகின்றோம்;
தரை வாழ்க்கை தமிழனுக்கேனோ அங்கு சிறை வாழ்க்கையானது.
விரைந்து சென்றும் இன்னுமேனோ ஈழத்திசை எட்டவில்லை
நரைவிட்ட ஒற்றுமையாதலால் நாட்டில் நல்லவையே இல்லை—எம்

கண்ணிலே ஒளியுண்டு ஆனாலும் ஈழமேனோ தெரியவில்லை—வந்த
புண்ணில் மீண்டும் அடிவிழவே அழுகின்றதையா அங்கம்—தமிழ்
மண்ணிலே பிறந்ததாலே அடிக்கடி அதற்கே இரையானோம்
வெண்ணிலவே உன்னை நம்பித்தானே ஈழத்தின் இருள்கள் உள்ளன!—நீயோ
கண்ணிலே கண்டும் காணாததைப் போல் கார்மேகமதில் மறைவதேன்?
விண்ணிலே மீன்கூட்டம் கூடத் தமிழனை வேடிக்கை பார்ப்பதேன்? —தமிழ்ப்
பண்ணிலே உயர்சுருதியிருந்தும் ஈழத்தில் இனிமையில்லையேன்?
தேரோடும் எங்கள் தெருக்களில் நாளெல்லாம் போராட்டமடா!
வேரோடும் தமிழ்ப் பயிர்களைத் தடுத்து வேலிபோட்டது யாரடா!!
நேரோடு நேர்நின்று மோதிப்பார்; நிச்சயம் தமிழ் வெல்லுமடா!!! -தமிழ்
நாரோடு சேர்ந்திருந்தால் எப்பூவும் நிச்சயம் நாறுமடா!
யாரோடு எமக்கென்ன பேச்சு; ஈழம் ஈட்டுவது உறுதியாச்சு -சிங்களமே

ஒன்று மட்டும் உறுதியாய் உனக்குச் சொல்வோம் கேள்...
என்றும் எங்கள் தமிழினம் தோல்விதனை ஏற்பதில்லை
நன்று உள்ள ஈழக் கொள்கை எந்நாளும் பொய்ப்பதில்லை -உனைக்
கொன்று குவிக்க உலகத்தமிழினம் ஓர்நாள் கொந்தளிக்கும்
அன்று தமிழன் ஈழம்பெறுவான்; இழந்ததெல்லாம் பெறுவான் ;
வென்று வருவோம்; சொர்க்க பூமி சென்று வருவோம்--இதை
நின்று பார்க்க அன்று நிச்சயம் நீயிராய்; இதையேன் நீயுணராய்?

வெல்லும் வெல்லும் தமிழ் ஈழம் -எம்பெருமை
சொல்லும் சொல்லும் அன்று அகிலம்.

-சோக. செல்வநாதன்
இ. அ. முகாம்
தோப்புக்கொல்லை, புதுக்கோட்டை-622303.

## ஓ அகதி மாணவனே!

ஈழத்து மண்ணை விட்டு அகதிகளாய்
இந்திய மண்ணில் கால்பதிக்க-இங்கேயும்
தமிழன் என்ற இனமிருந்து-நம்மைத்
தஞ்சம் கொடுத்துத் தங்கவைக்க
அகதி முகாம்களில்
அடைபட்டிருந்த காலம்மாறி
சுதந்திர ஆட்சி வந்து
சுற்றித் திரியும் வேளையில்
எம்மவரில் போட்டி பல
எழுந்து தலைதூக்குகின்றன!

வருங்காலச் சமுதாயமாய்
வளர்ந்தெழும் மாணவனே-நீ
நீதிக்காய்க் குரல் கொடுக்கும்போது
நியாயமற்ற பதில் கொடுப்பர் தலைவர்கள்
பழமையை மறக்கச் சொல்வர்
பண்பாடு அறிந்தும் எப்படி மறப்பது?

அவசரப்பட்டு முடிவெடுப்பவன்
அரைக் கிணறு தாண்டுபவன்
நிதானமாய் முடிவெடுத்து
நேர்வழியில் நடைபோடு
ஒற்றுமையைப் பேணு
ஒழுக்கத்தைக் கடைப்பிடி
கல்வியுடன் விளையாட்டுக்
கலையிலும் உயர்ந்து நில்
ஆத்திரத்தில் எதிர்ப்பவனையும்
அறிவால் வென்று தழுவிக் கொள்
உன் ஆயுதம் எழுதுகோலாய் இருக்கட்டும்
உனது வளர்ச்சி ஒற்றுமையில் தழைக்கட்டும்
ஓ அகதி மாணவனே! அனைத்திலும்
உன் திறமையை வெளிப்படுத்து!
ஈழத்துப் பெருமையை
இணைந்து நிலைப்படுத்து!

-பிரபு-யோகேஸ்
இ.அ. முகாம்
அவனியாபுரம், மதுரை-12.

## தமிழர் களம்

அர்த்தங்கள் தேடி நிற்கும்
தமிழீழம் ....!
பசிகளும் பட்டினிகளும்
கொலை செய்யும் களத்தில்
ரத்தங்களும்,
சதைப் பிண்டங்களும்
துப்பாக்கி ரவைகளுக்கும்
இனவாத அறிவாளுக்கும்
விலை பேரப்பட்டனவே !

மேகங்களிரண்டு
மோதிக்கொள்ளுமிரவில்
மின்னல் வேதாந்தம்
மிடுக்காய்க்கூறும்
கடுக்காய் அரசாங்கம்

இலங்கை அரசாங்கம்
நிலவுரசிச்
செல்லும் மேகத்திற்கு
இன்றோடு
நரைமுடியின் காலமும்
நிறைவேறிவிட்டன.
நிஜம் கொதிக்கின்ற
நீளப் பொழுதுமட்டும்
மிச்சமாய் கிடக்கின்றன.

வி. ஜெயசக்திவேல்

### நத்தை சொத்தையா?

ஒரு பிளேடின் கூர்மையான முனைப்பகுதியில் கூட தன்னைக் காயப்படுத்திக் கொள்ளாமல் நத்தையால் ஊர்ந்து செல்ல முடியும்.

## ஆசை!

ஆசை ! ஆசை ! ஆசை !
இது யாருக்குத் தானில்லை !
ஆசை இல்லா மனிதர்கள்
அகிலத்திலேயில்லை !

ஆசைகள் எப்போதும் பலரகம்
என் ஆசைகள் இங்கு சிலரகம் !

ஈழத்தாய் மடியினிலே
நான் தவழ்ந்த போதினிலே
நான் குளித்த தண்ணீரிலே
என் தாய் வளர்த்த தென்னைமரம்
சுகம் தானா ? நலம் தானா ?
என்று அறிய ஆசை !
குலை குலையாய்க் காய்த்து அது
களிப்பதுவும் மெய்தானா
என்றறியவும் ஓர் ஆசை !

என் வீட்டு முற்றத்திலே
எழிலாய் வளர்ந்திருக்கும்
வேப்ப மரத்தினிலே
விடிகாலை இசைபாடும்
இனிய குயில் நாதம்
கண்மூடி இரசிக்க எனக்குள் ஓர் ஆசை !

நட்புக்கு இலக்கணமாம்
என் அருமை நண்பியின்
மடல் கண்டேன் களிப்புற்றேன்
அவள் நிஜமுகம் காண எனக்குள்
ஆசையோ ஆசை !
சொந்தங்கள் எல்லாம் காண ஆசை !
அவர்கள் சுகமெல்லாம்
அறிய ஆசை ! ஆசை !

தந்தையைப் போல் என்மேல்
பாச மழை பொழிந்து
இலக்கிய நுணுக்கங்களை
இதமாக விளக்கித்தந்து
எழுத்தார்வம் ஊக்குவித்த
என் குருவின் ஆயுசு நூறாக
எனக்குள் ஓர் ஆசை !

என் தோட்டத்து மல்லிகையை
இதமாக நானே பறித்தெடுத்து
சரமாகத் தொடுத்து
சாமிக்கு மாலையிட்டு
மீதியை என் தலையில்
சூட்டிக் கொள்ள ஆசையோ ஆசை !

கவி எழுதும் இலக்கணத்தை-எனக்கு
கனிவுடனே கற்றுத்தந்த
உடன் பிறவாச் சகோதரன்
குயிலுக்குப் போட்டியிடும் குரலினிலே
கவி பாடிய நிகழ்ச்சியினை
இங்கு வானொலியில் நான் கேட்டுக்
களிப்புற்ற செய்தியினை
சொல்லிச்சொல்லி மகிழ்ந்து
அண்ணாவைப் பாராட்ட
ஆசையோ ஆசை !

மாலைப் பொழுதினிலே
அந்த மணற்கடற்கரையில்
வண்ண வண்ணப்பறவைகள்
வானில் பறந்து சென்றிடவே
சின்னப்பிள்ளை உள்ளத்தை
எந்தன் மகிழ்வில் கண்டு
சிந்தை குளிர்ந்து நெஞ்சம் மகிழ்ந்து
கவி பாடிய நாட்களை
மீண்டும் காண ஆசை !
கண்டு கவி பாடவும் ஆசையோ ஆசை !

என் ஊரில் சிறப்புடனே
எல்லோர்க்கும் அருள் வழங்கும்
அன்னை காளியம்மன்
திரு முகத்தைக்கண்டு கதற ஆசை !

வந்த மண்ணில் வஞ்சகமாய்
காலன் அவன் கல்நெஞ்சாய்
என் தந்தை உயிர் பறித்த
சோகக் கதையை அன்னையிடம்
சொல்லிச் சொல்லிக் கதறி அழவும் ஆசை !
என் சொந்த மண்ணிலே சீக்கிரமாய்
இந்த சுகமெல்லாம் காண
ஆசை ! ஆசை ! ஆசை !

ஐயையோ ! ஏட்டளவு முடிந்துவிட்டதே!
ஓ ! ஒவ்வொரு மனிதனின்
ஆசைகளைச் சொல்வதென்றால்
இந்த அகிலத்தின் வாழ்நாளே போதாதே !
அதிலும் ஈழ மக்களின்
இதயத்து ஆசைகளை
இன்று சொல்வதென்றால்
எந்த இதயமும் தாங்காதே !

செல்வி சித்திரா தேவசகாயம்
இ.அ.முகாம், போகநல்லூர், நெல்லை.

படிப்பகம்

www.padippakam.com



# சொல்லடா தோழா!

பெரியது என்றும் சிறியது என்றும் ஈழத்தில்
போராடும் இயக்கங்களுக்கு இடையே நீ
பேதங்கள் பார்ப்பது என்னடா தோழா
யாவும் பேரினவாதச் சிங்கள அரசை
எதிர்ப்பதில் ஒன்றுதான் என்று
சொல்லடா தோழா
போர் என்றும் பேச்சுவார்த்தை என்றும்
உன் தலைமை அலைவது ஏனடா தோழா
பேச்சுவார்த்தை என்பது போருக்கு முன்
நடக்கும் ஒப்பனை என்று சொல்லடா தோழா
ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்னும் உன்
தலைமையின் கொள்கை ஏனடா தோழா
எந்நேரச் சாவிலும் ஓர் அர்த்தம்
இருக்க வேண்டும் என்று சொல்லடா தோழா
நாளுக்கு நாள் ஈழத்தில் உன் தலையை
புதிய புதிய சட்டங்களை நூல் அறுந்த
பட்டமாய் அலைய விடுவது ஏனடா தோழா
உன் தலைமை ஏற்றிய சட்டத்தில் அடங்கும்
பகுத்தறிவாளிகளையும் ஜனநாயக
வாதிகளையும் பாசிச வெறி கொண்டு
அழிக்கும் சட்டத்தை அடியோடு
ஈழ நாட்டில் இருந்து அகற்றி விடும்படி
உன் தலைமைக்குச் சொல்லடா தோழா!

P. S. அன்ரனி
இ.அ.முகாம், கீழ்ப்புதுப்பட்டு

# ஈழத்தை நோக்கி

இரத்த வீதிகளில்
பேப்பர்களுக்குப் பதிலாக
பிணங்கள்.

இராணுவத்தின் வெறித்தாக்குதல்களில்
வெட்டுண்டு போய்
துடித்துடிக்கும் எம் ஈழத்தமிழர்கள்.

காயங்களோடு
தப்பிப் போய்-மனக்
காயங்களோடு,
குலுங்கி அழும் குடும்பங்கள்

இரவுகளின்
நிசப்தத்தை கிழிக்கும்
எரிமலைக் கைகளின்
அதிர்வேட்டுச் சத்தங்கள்

அந்தத் துப்பாக்கிச்
சத்தங்களையும் மீறியெழும்
எம் ஈழமக்களின்-அவலக்
கதறல்கள்

திசை தெரியாமல்
திண்டாடும் தமிழர்களை
சிறைக்குள்ளே வைத்து
தீக்குள்ளே தாளித்தனர்.

காண்கின்றவர்களை எல்லாம்
ஆயுதத்திற்கு இரைபோட்டு
இருமிச் சிரிக்கும் கொடூரங்கள்!

இத்தனை,
கதறல்களையும் கேவல்களையும்,
கண்டபின்னும்-எதுவும்
செய்ய முடியாது மௌனமாகக்
கண்ணீர் வடிக்கும்
மனமும், பேனாவும்!...

S. சீத்தா தேவி
இ. அ. முகாம்
கும்மிடிப்பூண்டி

# மனக் குமுறல்?

உழைக்கும் வர்க்கமே
மண் மீதின்னும் ஏழையாய்,
மண்டிக் கிடக்குதிங்கே...?

பலருழைப்பை அட்டையாய்,
உறிஞ்சித் தின்னும்
சோம்பேறிக் கூட்டங்கள்

சுகங்காணுதிங்கே...?
மண்மீதிலே மண்ணையுழுபவன்
அழுகைக் குரலின்னும்
ஓய்வில்லையிங்கே...?

தினமேச்சுப் பிழைக்கும்
நாடகமாடிக் கூட்டங்கள்
ஏகாதிபத்தியக் கோட்டையில்
வாழுதிங்கே...?

தேசத்தின் அவலங்கள்
மோசத்தின் கொடுநிலைகள்
எப்பொழுது தீருவதிங்கே...?

எல்லாம் இருப்பவனே
இன்னும் தேடுகிறான்
ஒன்றுமே யில்லா ஏழையவன்
எங்கு போவதிங்கே...?

இந்நிலைதனைச் செயல்தனை
கண்டென் மனம் துடிக்குதடா,
என் ஆத்மாவின் அடித்தளமே
எரிமலையாய் குமுறுதடா?

சைதை கவிசுரபி
சுப. சந்திரசேகரன்

ஈழத்தில்

# மன்னாரை நோக்கி ஒரு பார்வை

- க. இரதினராசசிங்கம் -

வடக்கு கிழக்கு பகுதிகளில் நடைபெற்று வரும் உச்சக்கட்டப் போரினாலும் மற்றும் இயற்கை அனர்த்தங்களாலும் அதிகமாகப் பாதிக்கப் படுவது கடற்கரையோரப் பிரதேச மக்களே.

இந்த நடைமுறையில் ஈழத்தில் மன்னார் பகுதி என்பது இராமேஸ்வரத்தில் இருந்து மிக நெருக்கமான ஒரு பகுதி. அதுவும் 30 தொடக்கம் 40 கிலோ மீட்டருக்குள் உள்ள ஒரு பகுதி.

இலங்கையில் நடைபெற்றுவரும் யுத்தத்தின் காரணமாக இலங்கையில் அரசால் போடப்பட்ட பல தடைச்சட்டங்களுள் கடல் வலய தடைச் சட்டமும் ஒன்றாகும். இந்தச் சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் மீனவக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே.

### துர்ப்பாக்கிய நிலை

இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மீனவ நிவாரணம் இலங்கை அரசால் நிறுத்தப் பட்டதால் அந்தப் பகுதி மக்கள் பட்டினிச் சாவை நோக்கிச் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் கட்டுப்பாடு அல்லாத பகுதியிலும் தற்பொழுது சுமார் ஒரு இலட்சம் பேர் இருக்கிறார்கள்.

இந்த மீனவக் குடும்பங்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகள் பல. மன்னார் பகுதியில் பொருள்களின் விலையெல்லாம் யானைவிலை குதிரைவிலையாக இருக்கிறது. மன்னார் பகுதி முக்கிய கிராமங்களில் வைத்தியசாலைகள் இருந்தும் அங்கு மருந்து வகைகளோ, டாக்டர் வசதிகளோ இல்லாத காரணத்தால் பலர் நோயாளிகளாகவே தொடர்ந்தும் இருந்து மரணத்தைத் தழுவவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

### விலையேற்றம்

இதே போல பாடசாலைகளும்ஒழுங்காக இயங்கமுடியாமைக்குக்காரணம் போதியளவு ஆசிரியர்கள் இல்லாமையும் தளபாட பற்றாக்குறைகளுமே இதனால் எதிர்கால வெளிச்சத்தை நோக்கி இருக்கும் மாணவர்களது வாழ்க்கையே இருண்ட சூனியமாகக் கூடிய ஒரு நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனைவிட மோசமானது போக்குவரத்துப் பிரச்சினை, எரிபொருள் விலையேற்றம் சாலைகள் சீரமைப்பு இல்லாமை முதலிய காரணத்தினால் குறிப்பிட்ட நேரங்களுக்கு வாகன வசதிகள் இல்லாமலும் மக்கள் கால்நடையாகவும், சைக்கிள்களிலுமே சென்று தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டி உள்ளது.

### தமிழகமே தஞ்சம்

யுத்த சூழ்நிலை தொடர்ந்தும் தாண்டவமாடிக் கொண்டிருப்பதனால் கடல் வலயத் தடைச் சட்டமும் நீட்டிக்கொண்டே போகப்படுகிறது. கடலில் ஒருமைல் கூட சென்று மீன் பிடிக்க முடியாத நிலை. அப்படி கள்ளத்தனமாக சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டால் கடற்படையினரின், தாக்குதல்கள் சொல்லிமாளாது.

மேலும்இந்தப் பொருளாதார பிரச்சினையில் இருந்து மக்கள் தங்களை விடுவித்துக்கொள்ள தமிழ்நாட்டில் தஞ்சமடையவே காத்திருக்கிறார்கள்.

இதற்குரிய சரியான படகு சேவை மற்றும் பாதை வசதி கிடைக்குமாயின் அண்மையில் விடத்தல் தீவுப் பகுதியில் இருந்து இராமேஸ்வரத்துக்கு சிலர் வந்து சேர்ந்ததைப் போல் அவர்களும் வருவதற்கு காத்து இருக்கிறார்களாம்.

உரிய நேர காலங்கள் வரும் போது மீண்டும் தமிழகத்துக்கு அகதிகள் வருவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# தென்மராட்சியிலிருந்து யாழ். செல்ல 3மணி நேரம்

தென்மராட்சி போன்ற தூர இடங்களிலிருந்து தினமும் யாழ்ப்பாணத்திற்கு தொழிலுக்காச் செல்வோர் கடும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதாயின் 13 இடங்களில் வாகனத்தை விட்டு இறங்கியும் ஏறியும் நடந்தும் சிரமப்பட வேண்டியுள்ளது. பெண்களும் முதியவர்களும் மிகவும் சிரமத்துடனேயே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

சாவகச்சேரியில் இருந்து யாழ் நகரை சென்றடைவதற்கு மூன்று மணி நேரம் தேவையாக உள்ளது.

காலை 10 மணிக்கே ஊழியர்கள் அலுவலகத்தைச் சென்றடைகின்றனர். மாலையாவதற்குள் வீட்டை அடைந்து விட வேண்டுமென்பதினால் ஊழியர்கள் பிற்பகல் 2 மணியுடனேயே அலுவலகத்தை விட்டு அவசரமாகப் புறப்பட்டு விடுகின்றனர்.

தினமும் 4 மணி நேரமே அலுவலகத்தில் கடமை புரியக் கூடியதாக உள்ளது.

வடக்கில் நேரமாற்றம் நடைமுறையில் இருப்பதாகக் தெரியவில்லை.

முன்னைய நேரப்படியே கருமங்கள் நடைபெறுகின்றன புதிய நேரப்படி பார்க்கையில் காலை 7மணிக்கு தென்மராட்சியிலிருந்து புறப்பட்டு யாழ்நகரை அடைவதற்கு 10 மணியாகி விடுகிறது இதன் காரணமாக அரச அலுவலகங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கருமங்கள் நடை பெறுகின்றன.

# செங்கலடியில் இருவர் பலி

செங்கலடியில் பாதுகாப்புப் படையினரின் வீதிச் சோதனை நிலையமருகே நின்று கொண்டிருந்த சிவிலியன் ஒருவரை புலிகள் இயக்க உறுப்பினர் இருவர் துப்பாக்கியால் சுட்டனர்.

படையினர் அவர்களை விரட்டிச்சென்று சுட்டதில் அவர்கள் இருவரும் பலியானார்கள், படையினர் 9 மி. மீற்றர் கைத்துப்பாக்கி ஒன்றையும் கிரேனட் ஒன்றையும் கைப்பற்றினர் என்று தேசிய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



# உயர்கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் தொடர்பான அறிவித்தல்

அன்புடையீர்,

அகதி மாணவர்கள் கல்லூரிகளில் சேருவதை தடைசெய்த ஆணை நீக்கப்பட்டுள்ளதை அனைவரும் அறிவீர்கள். அதாவது, கலை அறிவியல் கல்லூரிகளிலும், பொறியியல், மருத்துவம், வேளாண்மை, பாலிடெக்னிக் ஆகிய துறைகளிலும் மாணவர்கள் சேர்ந்து படிக்க அனுமதி வழங்கபபட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட துறைகளில் சேர்ந்து படிப்பது தொடர்பான விபரங்கள் கீழ்க் காணுமாறு:-

1) ***மருத்துவம்:-*** மருத்துவக் கல்லூரிகளில் சேர ஆர்வமிருப்போர் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் அல்லது விலங்கியல் (தாவரவியல்) ஆகிய பாடங்களை பன்னிரண்டாம் வகுப்பில் படித்து, குறைந்தது ஒவ்வொரு பாடத்திலும் 55% மதிப்பெண்களைப் பெறுவதுடன்; மொத்த மதிப்பெண் தொகுப்பில் மொத்தமாக 60% மதிப்பெண்களைப் பெற்றிருக்க வெண்டும். இத்தகுதிகளைப் பெற்றிருப்போர் பத்திரிகைகளில் வெளியாகும் பொது அறிவிப்புக்களுக்கமைய மருத்துவ இயக்குநரத்தில் விண்ணப்பம் பெற்று, அதிற்குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளுக்கேற்ப விண்ணப்பம் செய்யலாம்.

2) ***பொறியியல்:*** பொறியியல் கல்லூரிகளில் சேர ஆர்வம் கொண்டவர்கள் இயற்பியல், வேதியல், கணிதம் ஆகிய பாடங்களைப் பன்னிரண்டாம் வகுப்பில் படித்து, குறைந்தது ஒவ்வொரு பாடத்திலும் 55% மதிப்பெண்களைப் பெற்று மொத்தமாக 60% மதிப்பெண்களை மேற்குறிப்பிட்ட பாடங்களுக்கான மதிப்பீட்டின் தொகுப்பில் பெற்றிருக்க வேண்டும். இத்தகுதிகளைப் பெற்றிருப்போர் தொழிற்கல்வி இயக்குநரகத்தினால் செய்தித்தாள் மூலம் வெளியிடப்படும் விளம்பரத்தைக் கவனித்து அவ்விளம்பரத்தில் குறிப்பிடப்படும் முறையில் தொழிற்கல்வி இயக்குநரகத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்.

3) ***'பாலிடெக்னிக்':*** பாலிடெக்னிக் - இல் சேர்ந்து படிக்க விரும்புவோர் பத்தாம் வகுப்புத் தேர்வில் அறிவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் குறைந்தது 35% மதிப்பெண்களும், இவ்விரண்டின் தொகுப்பில் 45% மதிப்பெண்ணும் பெற்றிருக்க வேண்டும். அத்தகுதியைப் பெற்றோர் பொறியியல் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்யும் முறையில் பொது அறிவிப்புக்கமைய விண்ணப்பிக்க வேண்டும்.

4) ***வேளாண்மைத்துறை:*** தமிழ்நாடு வேளாண்மை 'பல்கலைக்கழகத்தில்' வேளாண்மைப் பட்டப்படிப்பில் சேர்ந்து படிக்கவிரும்புவோர் பன்னிரண்டாம்வகுப்பில் இயற்பியல், வேதியல் (தாவரவியல்) மற்றும் உயிரியல், விலங்கியல் ஆகிய பாடங்கள் கற்று ஒவ்வொன்றிலும் குறைந்தது 55% மதிப்பெண்களையும் இப்பாடங்களின் மதிப்பெண்களின் தொகுப்பில் 60% மதிப்பெண்களையும் பெற்றிருக்க வேண்டும், இத்துறையில் படிக்க விரும்புவோர் வேளாண்மைத்துறையால் செய்தித்தாள்களின் ஊடாக வெளியிடும் பொது விளம்பரத்திற்கு காத்திருந்து இவ்விளம்பரத்தில் குறிக்கப்பட்டுள்ள முறைக்கேற்ப வேளாண்மைத் துறைக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்.

5) ***கலை, அறிவியல், கல்லூரிகள்:*** கலை, அறிவியல் கல்லூரிகளில் பி.ஏ. பி.எஸ்.சி, பி.காம், பி.பி.ஏ. ஆகிய பட்டப்படிப்புகளையும், பட்ட மேற்படிப்புகளையும் படிக்க ஆர்வமுள்ளவர்கள் அருகிலுள்ள கல்லூரிகளில் அனுமதி பெற மனுச்செய்ய வேண்டும். இலங்கை அகதி மாணவர்களைச் சேர்ப்பது இந்திய மாணவர்களுக்கு பாதிப்பு அடையாத முறையில் ஒவ்வொரு துறையிலும் மேலதிக ஒதுக்கீடுகளைச் செய்யும்படி கல்விச் செயலர் ஆணை பிறப்பித்துள்ளார். மேலும், இலங்கை மாணவர்கள் விண்ணப்பம் செய்வதற்கு கால அவகாசமும் கொடுக்கப்பட்டுள்ளது.

6) ***தொழிற்பயிற்சி நிலையங்கள் (ஐ.டி.ஐ.) :*** ஐ.டி.ஐ-களில் சேர்ந்து படிக்க விரும்புவோர் அருகிலுள்ள இந்நிலையங்களை அணுகி சேர்வதற்கான முயற்சியினை செய்ய வேண்டும்.

குறிப்பு :- ஐ.டி.ஐ. என்ற பெயரில் இரண்டு விதமான பயிற்சி நிலையங்களை அணுகி சேர்வதற்கான முயற்சியினைச் செய்ய வேண்டும்.

***முதலாவது : அரசு தொழில் நுட்பக் கல்லூரிகள் :***

இவை அரசினால் நடத்தப்படும் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள். இந்நிறுவனங்களில் சேர்ந்து படிப்போர் பத்தாம் வகுப்புச் சித்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

சான்றிதழ்-தொழிற் சான்றிதழ் :
படிப்புக்காலம் : 1. பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு மூன்றாண்டு காலம்.
11. பன்னிரண்டாம் வகுப்பு முடித்தவர்களுக்கு இரண்டு ஆண்டு காலம்.

***இரண்டாவது : இந்திய தொழில்நுட்ப கல்வி நிலையம் :***

இந்நிலையங்கள் தனியாரால் நடத்தப்படும் முறையான அங்கீகாரம் பெறாதவை அவற்றில் படிக்க கல்வித் தகைமை இல்லை. இவற்றில் இடஒதுக்கீடு இல்லை.

***அஞ்சல் வழிக்கல்வி :*** கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்புப்பெறாத மாணவர்கள் அஞ்சல் வழியில் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு மற்றும், சான்றிதழ்ப்படிப்பு படிக்க வாய்ப்பு உண்டு. தமிழ் நாட்டில் சென்னை, மதுரை காமராஜர், சிதம்பரம் அண்ணாமலை, திருச்சி பாரதிதாசன், கோவை பாரதியார், பாண்டிச்சேரி ஆகிய பல்கலைக் கழகங்கள் தொலைக்கல்வி இயக்குநரகங்கள் மூலம் அஞ்சல் வழிக் கல்வித் திட்டங்களை நடத்தி வருகின்றன. மேலும், புதுதில்லி இந்திராகாந்தி பல்கலைக் கழகமும் இவ்விதக் கல்வித் திட்டங்களை நடத்தி வருகின்றது.

1. பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் பட்டப்படிப்பினை நேரடியாக மேற்கொள்ள வாய்ப்பு உண்டு.
2. பட்டம் பெற்ற மாணவர்கள் பட்ட மேற்படிப்பு மற்றும்; பட்ட மேற்பட்டயப் படிப்பு பாடங்களில் சேர்ந்து படிக்க வாய்ப்பு உண்டு.

### திறந்தவெளிப் பல்கலைக் கழகத் திட்டம்

சென்னை, அண்ணாமலை, மதுரை காமராஜர், இந்திராகாந்தி ஆகிய பல்கலைக் கழகங்கள் திறந்தவெளிப்பல்கலைக்கழக பாடத்திட்டங்களை அஞ்சல் வழியில் நடத்தி வருகின்றன. அடிப்படைக் கல்வித்தகுதி இல்லாத மாணவர்கள் இத் திட்டத்தின் கீழ் பட்டப் படிப்பினை மேற்கொள்ள [18] வயதினை நிறைவு செய்திருக்க வேண்டும். பட்ட மேற்படிப்பிற்கு [22] வயதினை நிறைவு செய்திருக்க வேண்டும் மேலும், இந்திராகாந்தி பல்கலைக்கழகம் பல சான்றிதழ் பயிற்சிகளையும் நடத்தி வருகின்றது.

✻ ஈழ அகதி மாணவர்கள் அனைவரும் உயர்கல்வி கற்க இவ்வரிய வாய்ப்புகளை பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கல்விக்குழு,**
***ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகம்***
**சென்னை-8.**

# கழக நிறுவனருக்கு ஒரு தமிழகப்பத்திரிகையாளரின் பாராட்டு!

ஐயா, ஈழத் தமிழ் அகதி மாணவர்களுக்கு மீண்டும் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் ஒதுக்கீடுகளை - பெற்று உயர் கல்வி தனை பெற்றிட தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் ஆணையினை பெற்றுத் தந்த தங்களின் கோரிக்கையும் விடாமுயற்சியும்- ஈழத்தமிழ் அகதி மாணர்களுக்கு நீங்கள் தந்த பரிசு இதைவிட ஈடு இணையற்றது வேறு எதுவும் இல்லை.

இந்த உலகத்தில் மிகப் பெரும் செல்வத்தையே அவர்களுக்கு பெற்றுத் தந்த ''தமிழ் அரசர்'' என்றே மனமார நான் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன். தாங்கள் தமிழர்கள் பால் கொண்டுள்ள ஈடுபாடு எந்தக் காலத்திலும் நிலை நிறுத்தும் உலகத்தில் எதை வேண்டுமானாலும் பணம் கொடுத்து வாங்க முடியும். உயர்வான உங்களின் தமிழ் நெஞ்சத்தை விலைக்கு வாங்கமுடியாது என்பது என்னுடைய ஆழ்ந்த மனம் நிறைந்த கருத்தாகும்.

நான் வயதில் சிறியவன் ஆனாலும் தங்களின் அன்புக்கும், தமிழ்பால் கொண்டுள்ள ஈடுபாட்டிற்கும் என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து மீண்டும் ஒருமுறை பாராட்டுகின்றேன். மேலும் தங்களின் கட்டுரைகளை தொடர்ந்து ''ஈழ சுதந்திரன்'' மூலம் தெரிந்து கொண்டு திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் உள்ள ஈழத் தமிழர் முகாம்களில் வாழ்ந்து வரும் தமிழ் அகதிகளுக்காக அவர்களுக்கு உதவி செய்ய அதிகாரிகளை அணுகியும் குறைகளைத் தீர்த்து வைத்தும் வருகிறேன். என்னால் முடிந்த பல்வேறு உதவிகளை பத்திரிகை நிருபர் என்ற முறையில் செய்து வருகின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு, தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தின் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டச் செயலாளரும் நிருபருமான கோ.ப. சின்னப்பா அவர்கள் ஈழஏதிலியர் மறுவாழ்வுக் கழக நிறுவனர் திரு.சா.செ. சந்திரகாசன் அவர்களுக்கு எழுதியுள்ள ஒரு மடலில் கூறியுள்ளார்.

# 45வயதிற்கு மேற்பட்டோரே வடக்கிலிருந்துவவுனியாவர அரசு அனுமதிக்குமாம்

வடக்கிலிருந்து 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் மாத்திரமே இனிமேல் வவுனியாவுக்குள் வருவதற்கு அனுமதிக்கப்படுவரென பாதுகாப்பு படையினர் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாண்டிக்குளம் ஊடாக வடபகுதி செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட போதிலும் வடக்கிலிருந்து எவரும் வருவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

இதேவேளை கிளிநொச்சி முல்லைத்தீவு மற்றும் வவுனியா - வடக்கு பிரதேசங்களுக்கு இருவார காலத்தின் பின்னர் ஆகஸ்ட் முதலாம் திகதி உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களை ஏற்றிய நிலையில் வன்னி பிரதேசத்திற்குச் செல்வதற்காக 118 லொறிகள் வவுனியாவில் தயார் நிலையில் உள்ளன. பாதுகாப்பு இணைப்பதிகாரி

மேற்படி லொறிகளை வன்னிக்கு அனுப்பிவைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வவுனிடத்வாமட்

அாசாங்க அதிபருக்கு அறிவித்திருக்கிறார்.

வடக்கிலிருந்து பொருள்களை ஏற்றிச் செல்ததற்காக சாந்தசோலைக்கு லொறிகள் வருவது தொடர்பான ஏற்பாடுகளை கவனிப்பதற்காக அதிகாரிகள் காத்திருக்கிறார்கள்.

வன்னிப் பிரதேசத்துக்கு இருவார காலமாக உணவுப் பொருள்கள் எடுத்துச்செல்லப் படாததால் அங்குள்ள அகதிகளின் நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியதாகிவுள்ளது.

கையில் பணமுமின்றி, உணவுமின்றி அகதிகள் கஷ்டப்படுகின்றனர்.

இதே சமயம் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து வவுனியாவின் வடபகுதியில் வந்து தங்கியுள்ளோரும் உணவுக்கு வழியின்றி அல்லல்படுகின்றனர்.

இந்த அகதிகளுக்கு உணவு நிவாரணம் வழங்க அவசர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

கிளிதொச்சி மாவட்டத்திலிருந்து 423 குடும்பங்களைச் சேர்ந்த 1867 பேர் வவுனியாவில் வடக்கே வந்து அகதிகளாகத் தங்கியுள்ளதாக அரசாங்க அதிபர் கூறினார்.

இவர்களில் 260 குடும்பங்களைச் சேர்ந்த 1165 பேர் மூன்று நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப் பட்டுள்ளனர். 163 குடும்பங்களைச் சேர்ந்த 700 பேர் உறவினர் நண்பர்கள், வீடுகளில் தங்கியுள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com




*யாரும் எத்தனை கேள்விகளை |ம் எழுதி அனுப்பலாம். பதில் அளிப்பதற்கான கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை குயுக்தியாரைச் சார்ந்தது. ※இக்குறியிட்ட கேள்வி பரிசு பெறுகிறது, வாசகர்களே குயுக்தியாரிடம் பதில் பெற கேள்விகளைத் தாராளமாக அனுப்புங்கள்.*

D. சித்திரா-போகநல்லூர்

கேள்வி : சந்திரிகா அரசின் மேல் இலங்கை ராணுவத்திற்கு முற்றாக வெறுப்பு ஏற்படும் காலம் வருமா ?

பதில் : சந்திரிகா மீது வெறுப்பு ஏற்பட்ட காலம் வந்தாலும், சிங்கள ராணுவத்துக்கு தமிழர் மீது விருப்பு ஏற்படாது. அதனிடம் இருப்பது இரண்டாயிரம் ஆண்டுகளாக சிங்களக் குருதியில் ஊட்டி வளர்க்கப்பட்ட இனப்பகை வெறியாகும். தமிழ் ஈழம் அமையாது, தமிழ் ராணுவம் உருவாகாது, தமிழர்களுக்கு இலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் சிங்கள ராணுவத் தாக்குதலிலிருந்து முற்றாக விடுதலை கிட்டாது

கே : இலங்கைத் தமிழர் பிரச்சினை மூன்றாம் உலகப் போரைத் தோற்றுவிக்கக் கூடுமா ?

ப : ஐரோப்பாவில் யூத இனத்தை பூண்டோடு ஒழிக்க நாஜிகளும், பாசிஸ்டுகளும் போர்த்தொடுக்க, யூதர்களைக் காப்பாற்றுவதற்காக ஆங்கில-பிரஞ்சு-அமெரிக்க வல்லரசுகள் அதை எதிர்த்ததால் யூதர் பிரச்சினையை மையமாகக் கொண்டே முதல் இரண்டு உலகப் போர்களும் நடந்தது உண்மை. ஆனால், அன்றைய ஆங்கில-அமெரிக்க வல்லரசுகளில் யூதர் செல்வாக்கு ஓங்கியிருந்ததாலேயே அவர்களுக்கு எதிரான போர்கள் உலகப் போர்களாக உருவெடுத்தன. தமிழர்கள் அப்படி இன்றைக்கு எந்த வல்லரசில் செல்வாக்கோடு இருக்கின்றனர்? தமிழர்களின் பொருட்டு எந்த வல்லரசு போரில் குதிக்கத் தயாராக இருக்கிறது? நமக்காக ஓடி வருமென்றிருந்த இந்திய அரசைக்கூட நம்மவர்கள் தானே விலகி ஓடச் செய்தது !

நமக்காக ஒரு உலகப் போரே மூளும் என்று நாமாகவே கற்பனை செய்து கொள்ளக் கூடாது.

கே : சிங்களக் கட்சிகள் ஆதிக்கப் போட்டியில் அடித்துக் கொண்டாலும், தமிழர் பிரச்சினையில் மட்டும் ஒரே முடிவைத்தானே எடுக்கின்றன ! அதே போல் நமது தமிழ்க்கட்சிகளும் தமிழீழம் என்ற ஒரே முடிவுக்கு வரலாம் தானே ?

ப : சிங்களப் பேரினவாதத்திற்கு நம்மை வெல்லலாம் என்று நம்மீதுள்ள நம்பிக்கையே நாம் ஒன்றுபடமாட்டோம் என்பது தானே ! அந்த நம்பிக்கையைக் காப்பாற்றா விட்டால் என்ன தமிழ்க்கட்சி !

சோக. செல்வநாதன்-தோப்புக்கொல்லை

கே : ஈழத் தமிழனுக்கு ஈழமும் நல்வாழ்வும் அண்மையில் அமையுமா ?

ப : அண்மையில் வந்ததைச் சேய்மையில் தள்ளியதே நம்மவர்கள்தானே !

சி, மத்தியாஸ்-நம்புதாழை.

கே : முல்லைத்தீவு வீழ்ச்சி இராணுவத்திற்கு பெருத்த அடிதானே ?

ப : ஆம்; ஆனால், யாழ்ப்பாணத்திலிருந்தே தமிழர்களை விரட்டியடிக்க முடியும் என்று அவர்கள் காட்டிவிட்டார்களே !

※ கே : எல்லாத் தமிழர்களும் இலங்கையை விட்டு வெளியேறிவிட்டால் என்னாகும் ?

ப : இலங்கை என்பது தனிச்சிங்கள நாடுதான் என்று தமிழர்களே பிரகடனப் படுத்துவதாகும் ?

வி. அப்துல்கரீம்-தொண்டி

கே : சந்திரிகா போனால் யார் வருவார் ?

ப : ஸ்ரீமணி அத்துலத் முதலி துடிப்பதாகத் தகவல். ஆனால், ஸ்ரீமாவோ பண்டாரநாயகா, 'தலைமை' தன் குடும்பத்திற்கு இல்லையென்றால், யு.என்.பி.யை ஆட்சிக்கு வரவாரே தவிர, மற்றவர் வர வழிவிட மாட்டார் !

கே : யாழ்ப்பாணத்தை இழந்தபிறகும் ஈழம் வரும் என்று நம்ப முடியுமா ?

ப : ஈழத்தில்தான் யாழ்ப்பாணம் இருக்கிறதேயொழிய, யாழ்ப்பாணத்தில் ஈழம் இல்லை !

B.S மணி-ரேணிகுண்டா

கே : ராணுவத் தளவாடங்கள் வாங்கிய வகையில் கமிஷனாக சந்திரிகா குடும்பத்தைச் சேர்ந்த சீவிலி ரத்வத்த மட்டும் ரூ. 1400 கோடி [இந்திய மதிப்பில்] சம்பாதித்ததாக ஈழசுதந்திரனில் செய்தி கண்டேன். அப்படியானால் சந்திரிகா போரைத் தொடரத் தானே செய்வார் ?

ப: "ஆதாயமில்லாமல் செட்டியார் ஆற்றில் இறங்க மாட்டார்" என்ற தமிழ் நாட்டுப் பழமொழிதான் அதற்குப் பதில் ?

கே : விடுதலைப் புலிகளே தமிழ் நாட்டுக்கு அகதிகளை அனுப்பி வைக்கிறார்கள் என்பது உண்மையா ?

ப : ஓயாத போரின் காரணமாக உயிர் தப்புவதற்காகவே இலங்கையிலிருந்து தமிழ் மக்கள் இந்தியாவுக்கு அகதிகளாக ஓடி வருகிறார்கள் வேறு வழியின்றி விடுதலைப் புலிகள் அதற்கு உதவுகிறார்கள் என்பதுதான் உண்மை.

## தாப்பாத்தி அகதி முகாமில் குறிப்பேடு வழங்கு விழா

நெல்லை மண்டலத்தைச் சேர்ந்த வ.உ.சி மாவட்டம் தாப்பாத்தி இலங்கை அகதி முகாமில் மாணவர்களுக்கு குறிப்பேடுகள் வழங்கும் விழா 29-7-96 அன்று ஈழஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் சார்பில் நடைபெற்றது. சென்னைத் தலைமையகத்திலிருந்து திரு.சாமுவேல், நாகலாபுரம் பங்குத் தந்தை அருட்திரு டென்சில்ராஜ் மற்றும் நெல்லை மண்டலப் பொறுப்பாளர் மகேஸ்வரன், மாவட்டத் தொண்டர் கணேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஈழப்பண்ணுடன் தொடங்கிய இவ்விழாவுக்கு முகாம் நலப் பணியாளர் சி. கனிசியஸ் தலைமை வகிக்க, முகாம் நற்பணிமன்றத் தலைவர் ராஜபாண்டியன் வாழ்த்துரை வழங்கினார். அருட்திரு டென்சில்ராஜ் ஆசியுரை வழங்க, சிறப்பு விருந்தினர்களும், மாணவர் மன்றப் பிரதிநிதிகளும் உரையாற்றினர்.

இறுதியில் TMSSS நிறுவனம் முகாம் மக்களுக்கு குடிதண்ணீர் தொட்டி, கூரைசீட், மாணவர் சீருடை, தையல் எந்திரங்கள் முதலியவற்றை அளித்து ஆற்றிய சேவைக்கு நன்றி நவிலப்பட்டது. முகாம் நற்பணிமன்றப் பொருளாளர் கணேஷ் (நாகநாதன்) செயலாளர்தவளத்கான், உபசெயலாளர் நிக்கலஸ், உபதலைவர் அருண், பாலகிருஷ்ணன் குழந்தைவேல் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்க, மாணவ மாணவிகளுக்கு நோட்டுப்புத்தகம் வழங்கப்பட்டது.

தகவல்: சி. கனிசியஸ்

# தமிழர்க்கெதிராகச் சண்டையிடும் படையினருக்கு ஊதிய உயர்வு

### சந்திரிகா குமாரதுங்க அறிவிப்பு

எந்த வகையில் பார்த்தாலும் கிளிநொச்சி ராணுவத்தின் அணுகுமுறை மிகவும் கவனத்துடன் கூடிய அணுகு முறையாகவே காணப்படுகின்றது.

ஆனால் புலிகளின் வசமுள்ள ஊரைக் கைப்பற்றுவதுதான் அண்மை நடவடிக்கையின் குறிக்கோள் என்பதை அரசு ராணுவத் தளபதியான பிரிகேடியர் முனசிங்க உறுதிப்படுத்தவில்லை. இயன்ற அளவு அதிக எண்ணிக்கையினரைக் கொல்லும் நோக்குடன் நேரடியாகத் தங்களுடன் மோதுமாறு புலிகளைப் போருக்கு இழுக்கத் தம்முடைய ஆயுதப் படை செய்யும் தந்திரம் வெற்றிகரமாக நிறைவேறி வருகிறது என்று அவர் தெரிவித்தார்.

முறையாக சண்டை தொடங்கிய கடந்த ஞாயிறு முதல் அரசு படை வீரர்கள் 48 பேர் வரை கொல்லப்பட்டு இருப்பார்கள் என்று தாம் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார். தமிழ்ப்புலிகள் வானொலிமூலம் அனுப்பும் தகவல்களில் இறந்த 183 பாதுகாப்பு வீரர்களின் உடல் விட்டுச் செலலப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

*கிளிநொச்சியின் அவலம்*

ஆனால் பொது மக்கள் நிறைந்து இருக்கும் பொது இடங்கள் மீது வேண்டும் என்றே இலங்கையின் ஆயுதப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன என்று புலிகளின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளது.

ஒரு காலத்தில் செழிப்புடன் இருந்த கிளிநொச்சி நகரம் இன்று முற்றிலும் அழிக்கப்பட்டு இருக்கின்றது. அந்த நகரத்தில் வசித்து வந்த பல லட்சம் மக்கள் இடையறாத ஷெல் தாக்குதலினால் வெளியே விரட்டப்பட்டு விட்டார்கள் எனவும் புலிகளின் அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது. பன்னாட்டு உதவி அமைப்புகள் கூட அந்த நகரத்தைவிட்டு விலகிக்கொண்டு உள்ளன. இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படவேண்டிய உணவுப்பொருட்கள் அரசு கட்டுப்பாட்டில் இருக்கும் வவுனியாவில் மூன்று வாரமாக எடுத்துச் செல்ல முடியாமல் கிடக்கின்றன. இந்த தாமதத்திற்கான காரணம் இன்னதென்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் ராணுவ நடவடிக்கை நடந்துகொண்டு இருக்கும்போது கிளர்ச்சிப் பகுதிகளுக்கு உணவுப்பொருட்கள் அனுப்பப்படுவதை அனுமதிக்க அரசுக்கு மனமில்லாமல் இருக்கலாம் என்று கண்ணோட்டக்காரர்கள் கூறுகிறார்கள்.

*படையினருக்கு ஊதிய ஊயர்வு*

அரசுப்படையின்தலமைத் தளபதியான இலங்கை அதிபர் வடகிழக்குப்பகுதியில் போர் புரியும் ராணுவ வீரர்களுக்கும், படை அலுவர்க்கும் ஊதிய உயர்வு அளித்துள்ளார்கள். நாட்டுக்கு அவர்கள் அளிக்கும் சேவையைப்பாராட்டும் முகமாக இந்த ஊதிய உயர்வு வழங்கியிருப்பதாக அதிபர் கூறியுள்ளார். இருப்பினும் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வருவதாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தேர்தல் நேரத்தில் உறுதிமொழியளித்த போதிலும் போர் முடிவடைவதற்கான அறிகுறிகள் எவையும் தெரியவில்லை.

இவ்வாறு, பி.பி.சி. தனது 7-8-96 செய்தி ஒலிபரப்பில் குறிப்பிட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்திற்கு விரைவில் ஆயிரம் தொலைபேசி இணைப்புகள்

"யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு தொலைபேசி வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கும் வகையில் ஆயிரம் இணைப்புகளை வழங்கக்கூடிய பரிவர்த்தனை உபகரணங்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன இப்போது அங்கு ஐம்பது இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. வெகு விரைவில் ஏனைய இணைப்யுகளும் இயங்க ஆரம்பமாகும்." என தபால், தந்தி, தொலை தொடர்புகள் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ. எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

## ரொட்டிமாவுக்கும் விலை உயர்வு மேலும் தியாகம் செய்ய தயாராவீர்

### மக்களுக்கு சந்திரிகா எச்சரிக்கை

போருக்குப் பணம் திரட்டும் முயற்சியாக, ரொட்டி மாவு முதலியவற்றின் விலைகளை உயர்த்தி சிறீலங்கா அரசு அறிவிப்புச் செய்திருக்கிறது. இப்பொருட்களுக்கு இதுவரை மானியம் கொடுக்கப்பட்டு வந்து இருக்கிறது. போருக்காகும் செலவைச் சரிக்கட்ட உடனடியாக மானிய வெட்டுக்களை எதிர்பாருங்கள் என்றும் எதிர் வரும் நாட்களில் மேலதிக தியாகத்துக்குத் தயாராக இருக்கும் படியும் கடந்த வாரம் ஜனாதிபதி குமாரதுங்க மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் மக்கள் எதிர்காலம்...

[முதல் பக்கத் தொடர்ச்சி]

வன்னிக்காடுகளில் பதுங்கியுள்ள விடுதலைப் புலிகளைத் தேடிப்பிடித்து அழிக்கிறோம் என்ற பெயரால் தற்போது சிங்கள ராணுவம் நடத்தி வரும் போரும் தமிழ்ப் பொது மக்களைத் துரத்திச் சென்று கொன்றொழிக்கும் இனக்கொலையாகவே நடைபெற்று வருகிறது.

### நெஞ்சம் நடுங்கும் நிலை

விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை ஏற்கனவே நடத்திய தற்கொலைப் போர்களில் ஈழத்து இளைஞர்களையெல்லாம் பலிகொடுத்துவிட்டது. இரண்டாவது கட்டமாக 'டீன் ஏஜ்' என்று சொல்லக்கூடிய 10 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட தமிழ்ப்பிள்ளைகளையும் போர்க்களத்திற்கு அனுப்பி, அவர்களிலும் கணிசமானோர் பலியாகிவிட்டதால், இப்போது மூன்றாவது கட்டமாக தொடக்கப்பள்ளிச் சிறார்கள் கூட ஆயுதப்பாணிகளாக்கப்பட்டு யுத்த களத்திற்கு, இல்லையில்லை ... மரணக் குழிக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர். இப்படியே போனால் இன்னும் கொஞ்ச நாளில் ஈழத்தமிழினத்தில் வயோதிகர்களையும், குழந்தைகளையும், உடல் ஊனமுற்றவர்களையும்தான் பார்க்க வேண்டியதேற்படும் என்பதை நினைக்கவே நெஞ்சம் நடுங்குகின்றது.

அரசுத் தரப்பில் தற்போதைய யுத்தத்தை நடத்தும் சிங்களப்படைகளின் தளபதி முனசிங்கவின் கூற்று, யுத்தமெனும் பொறியில் விடுதலைப் புலிகளின் மூலம் தமிழர்களைக் கவர்ந்து அழிப்பதே சந்திரிகாவின் நோக்கம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

''வெற்றி பெறுவது என்பதை விட எவ்வளவு அதிகமாக விடுதலைப் புலிகளை அழிக்க முடியுமோ அதைச் செய்வதுதான் எமது யுத்த தந்திரம்'' என்று இதை அவர் சொல்லாமல் சொல்லியுள்ளார். அவர்கள் மொழியில் 'விடுதலைப் புலிகள்' என்பது முழுத் தமிழர்களையும் என்றே பொருள்படுவதாகும்.

### புலம்பெயர்வு

இதன் காரணமாகத்தான் 1983ம் ஆண்டு தொட்டே ஈழத்தமிழர்கள் புலம் பெயர்வது என்பது வேகமாக நடைபெற்று வருகிறது.

ஒரு பக்கம் புலப் பெயர்வும், மறு பக்கம் யுத்தமென்ற பெயரால் இனக் கொலையும் ஈழத்தில் தொடர்ந்து நடந்து வருமாயின் நாளை தமிழினம் இருந்தது என்பதே அங்கு பழைய வரலாறு ஆகிவிடக் கூடும்.

ஏனெனில், இப்போது ஈழப் பகுதியில் செயல்பட்டு வரும் வெளிநாட்டு நிவாரண உதவி அமைப்புகளே இது குறித்து வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிக்கத் தொடங்கிவிட்டன.

### தப்பியோடும் தமிழர்கள்

''சிறீலங்கா அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையேயான தீவிரச் சண்டைகளிலிருந்து தப்புவதற்காக தமிழ் மக்கள் இந்தியாவுக்கு ஓட முயற்சிக்கிறார்கள். படுமோசமான சூழ்நிலையிலிருந்து எவ்வாறாவது தப்பிச் சென்று விட வேண்டுமென்ற விரக்தியின் விளிம்பிலான பிரயத்தனமே இது'' என்று அந்த அமைப்புகளின் ஊழியர்கள் தத்தம் நாடுகளுக்குச் செய்தி அனுப்பியுள்ளனர்.

ஆகவே, இலங்கைத் தமிழ் மக்களின் இந்த அழிவைத் தடுக்க வேண்டுமானால், இந்தியா இதில் உடனடியாகத் தலையிட்டாக வேண்டும்.

அகதிகளாக வெளியேறும் தமிழர்கள் பெரும்பாலும் இந்தியாவுக்கே வருவதாலும், ஏற்கனவே இந்தியாவில் ஒரு லட்சம் பேர் வரை இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியிருப்பதாலும், இந்தியா தலையிட்டு சிறீலங்கா அரசை வழிக்குக் கொண்டு வரவேண்டிய உரிமையும் கடமையும் அதற்கு இருக்கிறது.

### இந்தியாவின் பொறுப்பு

இந்தியா தலையிடாமல் இலங்கைத் தமிழ் மக்களின் எதிர்காலம் கேள்விக் குறியாவதைத் தடுக்க முடியாது.

இந்தியா ஒரு மாபெரும் ஜனநாயகநாடு என்பதாலும், வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே இலங்கையுடன் இந்தியாவுக்கு மொழி, இன, கலாச்சார உறவுகள் இருந்து வருவதாலும், இப்பிராந்தியத்தில் இந்தியா ஒரு வல்லரசாக விளங்குவதாலும் மனிதாபிமான அடிப்படையில் கூட இலங்கைத் தமிழர்களுக்காக மற்ற நாடுகள் தலையிடத் தயங்கும் சூழ்நிலையில், இந்திய அரசு மாந்தநேய அடிப்படையிலேனும் இலங்கைத் தமிழ் மக்களைக் காப்பாற்ற முன்வர வேண்டும்.

மேலும், ஏற்கனவே இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை சிறீலங்கா அரசு மதித்து நடந்து கொள்ளாததாலும், இந்தியாவுடன் போரிட்ட சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து சிறீலங்காராணுவதளவாடங்களை வாங்கிக் குவிப்பதாலும் இப்போது நடப்பதை உள்நாட்டு போர் என்று கருதாமல், தென்னெல்லையில் இந்தியாவுக்கெதிரான களமாக இலங்கையைச் சிறீலங்கா அரசு உருவாக்கி வருகிறது என்பதை மனதிற்கொண்டு, நேச சக்தியாகிய தமிழ் மக்களை அழிவிலிருந்து மீட்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

-தமிழ்முதாசன்



சென்னையில் நடந்த நலப்பணியாளர்கள் பயிற்சிக்களத்தில் இலண்டன்'மியோட்' நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் ஸ்ரீகரன் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தபோது எடுத்தபடம்.

# முல்லைத்தீவில் 1000படையினர் பலி: சிங்கள அதிகாரிகள் ஒப்புதல்

வடபுலக்கடலில் 9 புலிப் படையின் ரோந்துப்படகுகளை கண்டதாகவும் புலிப்படைகளின் மேல் கடற்படையினர் இயந்திரத் துப்பாக்கிகளாலும் சிறுரக ஆயுதங்களாலும் தாக்கினார்கள் என்றும் இதிலே 8 புலிகள் (புலிப்படைப் போராளிகள்) கொல்லப்பட்டதாகவும், அவர்களின் படகு ஒன்று முற்றும்முழுவதுமாக கவிழ்ந்து போனது என்றும் ராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள்.

கடற்படையின் படகு அத்தாக்குதலில் சிறிது பாதிக்கப்பட்டதாகவும், ஆனால் கடற்படை வீரர்கள் பாதிப்பு அடையவில்லை என்றும், உயிர் தப்பிய புலிகள் அனைவரும் துப்பாக்கிச் சூடுகளால் பாதிக்கப்பட்டு புலிகளின்மீதிப் படகுகளில் ஏறித் தப்பிப் போய் விட்டார்கள் என்றும் பாதுகாப்புப்படை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக பல தாக்குதலை நடத்தி ராணுவம் அண்மையில் கைப்பற்றிய யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் வடகரைப் பகுதியில்தான் இந்தச் சம்பவம் நடைபெற்று இருக்கிறது. ஆனால் தீவின் வடகரைப் பகுதியில்தான் புலிகளின் கடல் அணியான கடற்புலிகள் பலமாக இயங்குவதாகச் சொல்லப்படுகிறது. சில நாட்களுக்கு முன் முல்லைத்தீவு முகாம் மீது தாக்குதல் நடத்தி, அங்கே 1000-த்துக்கும் மேலான அரசாங்கப் படை வீரர்களைப் புலிகள் கொன்றதாகவும், தொடர்ந்து புலிகளுக்கு எதிராகக் கண்காணிப்பு வேலைகள் அதிகமாக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த இரண்டு வாரங்களாகக் கிளிநொச்சி என்கின்ற பிரதேசத்தில் அரசு படைகளின் தாக்குதலைத் தொடர்ந்து புலிகளுக்கு ஆயுதங்கள் எதுவும் போகக்கூடாது என்பதிலே தாங்கள் அதிகமாகக் கண்காணித்து இருப்பதாகவும் மிகவும் விழிப்பாக இருப்பதாகவும் கடலில் நடக்கும் போக்குவரத்தை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் ராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள்.

ஆனால் கடலில்மீன்பிடித்துக் கொண்டு இருந்தவர்களை அரச படையினர் சுட்ட சம்பவங்களும் படகில் இருந்தவர்களைப் புலிகள் என்று கூறிய சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன.

# செஞ்சிலுவை சங்க மூலமாக புலிகள் பகுதிக்கு சரக்கு லாரி

பி.பி.சி. தரும் செய்தி

வவுனியாவில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளுக்கு உணவு எடுத்துச் செல்லும் வாகனங்கள் நேற்று முதல் செல்லத் தொடங்கியுள்ளன. இது தொடர்பாக இன்றைய நிலைமைகள் என்னவென்று வவுனியாவில் இருக்கும் இலங்கையின் வடகிழக்குப் பகுதி செஞ்சிலுவைச் சங்க இணைப் பதிகாரி சிவநாதன் கிசோர் அவர்களைக் கேட்பதற்கு நேற்று உத்தரவு வந்ததின் பேரில் 10-லாரிகளில் மா ஏற்பட்டு அந்தப் பக்கம் சென்றது மேலும் 30 லாரிகள் வெற்று லாரிகளாகத் தரித்து நின்றன. அந்த லாரிகளில் 29-லாரிகள் இன்று புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதில் 21-லாரிகள் மாவும், 5-லாரிகளில் அரிசியும் இரண்டு லாரிகளில் சீனியும் சில்லறைச் சாமான்கள் 1லாரியுமாக 29-லாரிகள் அங்கு சென்றுள்ளன என்றார்.

கே: இப்போது கூடுதலாக புலிகளிடம் இருந்து லாரிகள் வந்ததால் ஏற்றி அனுப்புவதற்கு போதுமான சாமான்கள் தயாராக இருக்கின்றனவா?

ப: புலிகளிடம் இருந்து 50 லாரிகளை நாளை எதிர்பார்க்கின்றோம். 50 லாரிகள் வந்தால் இங்கு ஏற்றி அனுப்புவதற்கு சாமான்கள் தாராளமாக இருக்கின்றன.

கே: புலிகளிடம் இருந்து லாரிகள் எதிர்பார்க்கின்றோம் என்று கூறுகின்றீர்கள். அவர்களிடம் தொடர்பு கொண்டீர்களா? அதைப் பற்றித் தகவல் ஏதாவது உண்டா?

ப: தொடர்பு கொண்ட பொழுது அவர்கள் கூறினார்கள் சரக்கு வந்த பின் தாங்கள் லாரிகள் அனுப்புவதாக, அநேகமாக அங்கு இருந்து 50 லாரிகள் வரும் என்று எதிர்பார்க்கின்றோம். அதற்குரிய தகவலையும் அறிவித்துள்ளோம்.

கே: இது தவிர அகதிகள் எவராவது வவுனியாவுக்கு வந்திருக்கிறார்களா? கூடுதலாக?

ப: இன்று பின்னேரம் தாண்டிக்குளம் நான் சென்ற பொழுது 60 பேர் அகதிகள் வந்ததைத் தாண்டிக்குளம் அருகே நான் கண்டேன். ஆனால் இதன் சரியான விபரம் தெரியவில்லை.

இவ்வாறு பி.பி.சி. தனது 13-8-96 செய்தி ஒலிபரப்பில் கூறியுள்ளது.

Edited Printed and Published by ARUNACHALAM GOPALAN, No 14, Salt Colony, Ist Street, IIIrd Floor, Egmore, Madras-00008.
Printed at Kuralnery Achagam, Madras-94.

சனநாயகம்-சமதர்மம்-சமய சார்பின்மை-நமது பாதை